# ரஷ்ய 'டாக்ஸி' சந்திரத் தரையில் நகர்ந்தது

Registered as a News Paper in Ceylon  விலை சதம் 15  ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 279
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் கார்த்திகை 3 றமழான் 18 புதன்கிழமை (18-11-70)

மக்கள்
விரும்பி
வாங்குவது
எவர்
பிறைற்
சோப்

மணம்
குணம்
சுவை
நிறைந்தது
பிறேமா
லோட்டஸ்
தூள்
தேயிலை




பிறேமா தொழிற்சாலை
பருத்தித்துறை

## சோவியத் யூனியனின் மற்றொரு சாதனை

மாஸ்கோ, நவ. 17

சோவியத் ரஷ்யா விண்வெளித்துறையில் மற்றொரு உலக சாதனையை நிகழ்த்தியுள்ளது. சந்திரனுக்கு அனுப்பிய ரஷ்யாவின் ஆளில்லாத லூனா-17 கலம் இன்று சந்திரத் தரையில் இறங்கி, 'டாக்ஸி' ஒன்றை நகர வைத்து இந்த சாதனையைச் செய்தது.

இலங்கை நேரப்படி இன்று காலை 9-7 மணிக்கு லூனா-17 என்ற கலம் சந்திரத் தரையில் இயங்கியது. இந்தக்கலத்திலிருந்து தானியங்கும்வண்டியொன்று விடுவிக்கப்பட்டது.

எட்டுச் சக்கரங்களைக் கொண்ட இந்த டாக்ஸி சந்திரத்தரையில 20 மீட்டர் நகர்ந்து சந்திரத் தரையில் தனக்கென்ற ஒரு பாதையில் இந்த 'டாக்ஸி' சென்றது.

பிரெஞ்சு நாட்டு கருவியொன்றும்ரஷ்யாஇப்போது அனுப்பியுள்ள கலத்தில் இணைக்கப்பட்டுள்ளது. பிரெஞ்சுக்கும் சோவியத் யூனியனுக்கு மிடையில் செய்யப்பட்ட வெளிவான்துறை ஒப்பந்தத்தின்படி இந்த இணைப்பு செய்யப்பட்டுள்ளது.

ஆளில்லாத ரஷ்யக் கலமொன்றை சந்திரனுக்கு அனுப்பி, அங்கிருந்துசந்திர மண்ணை பூமிக்குக் கொண்டு வந்த உலகசாதனையை ரஷ்யா முன்னர் நிகழ்த்தியதுதெரிந்ததே.

## புதிய செனட்டர்
### திரு. விஜயகுலசூரியா

காலி செவ்வாய்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நீண்ட நாளைய அங்கத்தவரான திரு. டபிள்யு ரி விஜயகுலசூரியாவை கவர்னர் ஜெனரல் வில்லியம் கொபல்லாவ புதிய செனட்டராக நியமித்துள்ளார்.

காலியில் வழக்கறிஞராகக் கடமையாற்றியதிரு. விஜயகுலசூரியா காலி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கிளையின் தலைவருமாவர். 1965ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கசுதந்திரக்கட்சியின் அபேட்சகராக போட்டியிட்ட இவர் உள்ளூராட்சிசபை அங்கத்தவராக அரசியலில் நுழைந்த இவர் காலியில் உபதலைவராக தெரிவுசெய்யப்பட்ட ஒரே ஒரு இடதுசாரி அங்கத்தவர் என்ற பெருமையையும் இவர் பெற்றவர். எண்ணெய்க் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

# மாவட்ட நிர்வாகம் மாற்றி அமைக்கப்படும்

## அரசாங்க அதிபர்கள் மகாநாட்டில் பிரதமர்

கோட்டை, செவ்வாய்

அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்துவதில் அரசாங்க அதிபர்கள் முக்கிய பங்கு வகிக்கிறார்கள், மக்களது அபிலாசைகளுக்கமைய மாவட்ட நிர்வாகம் மாற்றியமைக்கப்படும்

மக்கள் அரசாங்கம் பதவியேற்றபின்னர் முதன் முதலாகக் கூட்டப்பட்ட அரசாங்க அதிபர்கள் மகாநாட்டுக்குத்தலைமைதாங்கி உரை நிகழ்த்திய பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இம் மகாநாடு நேற்றுக்காலை கொழும்பு மத்தியவங்கி மகா...

விடாது. ஏகாதிபத்திய தன்மைகளுக்கு முற்றுப் புள்ளிவைத்துவிடும்.

### விவசாயம்

அரசாங்கம் பேச்சளவிலேயே விவசாயத்தை முன்னேற்றியது. நாங்கள் செயல் மூலம் விவசாயத்தை முன்னேற்றுகிறோம் விவசாய அமைச்சர் மேற்கொண்டுள்ள பல திட்டங்களால்

நாட்டு பணமும் வீண் விரயமாகாமல் நாம் பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு இயற்கை வள விரயத்தைப் போக்கவும் அன்னிய செலாவணியை மீதப்படுத்தவும் அரசாங்கமும் அரசாங்கம் திருவிருக்கும் அரசாங்க உத்தேச கூட்டுஸ்தாபனமும் நடவடிக்கைகள் மேற்கொள்

## பயமுறுத்தல் வழக்கில் எதிரிகள் 7 பேரும் விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

கரியப்புலம் ஞானவைரவர் கோவிலை இடித்து துப்பாக்கியால் சுடுவதாகப் பயமுறுத்தியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் ஏழு பேரும் விடுதலைசெய்யப்பட்டனர். இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட்டயஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் திருநெல்வேலி வடக்கு கனகசபை சிவஞானம் என்பவரை துப்பாக்கியால் சுடுவதாகப் பயமுறுத்தினர்கள் என்று சோமசுந்தரம் வன்னியசிங்கம் மீதும் மற்றும் ஆறுபேர் மீதும் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

ஆனைக்கோட்டைப் பொலிசார் வழக்குத்தாக்கல்செய்ய மறுத்ததைத் தொடர்ந்து வழக்காளியான சிவஞானம் தனிப்பட்ட வழக்கைத் தாக்கல் செய்தார்.

இவ்வழக்கை விசாரணை செய்த மாஜிஸ்திரேட்டயஸ் எதிரிகள் அனைவரும் குற்றவாளிகளல்லவெனத் தீர்ப்பளித்து எதிரிகளை விடுதலை செய்தார்.

எதிரிகள் சார்பில் அட்வக்கேட் எஸ். தம்பித்துரை அட்வக்கேட் அரசுவால்டனின் உதவியுடனும், புறக்டர் விசுவநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானார். வழக்காளி சார்பில் அட்வக்கேட் கே வி எஸ் சண்முகநாதன், புறக்டர் வி. நடராசா, புறக்டர் ரி. யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானார்.

## தீ விபத்து

சுழிபுரம், செவ்வாய்

கோவில் தொண்டில் ஈடுபட்டிருந்தபோது சிறுவன் ஒருவன் தீவிபத்துக்குள்ளானான், தெய்வாதீனமாக உயிர் தப்பிய இவன சிகிச்சைபெற்று வருகின்றான்

பண்ணாகம் தெற்கு விசவத்தனை முருகமூர்த்தி கோவிலில் இச்சிறுவன் தினமும் இறைத்தொண்டு புரிவாராம். சம்பவதினத்தன்று கோவில் விளக்குகளை ஏற்றுகையில் இவரது உடையில் தீப்பற்றியது, நின்றவர்களின் உதவியால் சிறுவன் விபத்திலின்றும் காப்பாற்றப்பட்டு தனியார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்,

## ஜோர்டானில் புதிய மோதல்: 40 பேர்வரை பலி

அம்மான், நவ. 17

அம்மானுக்கு வடக்கே உள்ள இர்பிட் பிரதேசத்தில் ஜோர்டானியப் படைகளுக்கும் பாலஸ்தீனக் கொரிலாப் படைகளுக்குமிடையே புதிதாக சண்டை நடைபெற்றுள்ளது. 40 பேர் கொல்லப்பட்டோ காயமடைந்தோ இருக்கலாமென அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன,

கடந்த இரண்ட மாதங்களுக்கு முன் ஜோர்டான் அரசாங்கத்திற்கும் பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கு மிடையே ஏற்பட்ட உடன்படிக்கையின் பின் நடைபெற்ற முதலாவது பெரும்மோதல் இதுவாகும். இந்த உடன்படிக்கையின்படி இர்பிட் பிரதேசத்தை ...

... தாக்குதல் நடத்தியதாகச் செய்திகள் கூறுகின்றன. அதன்பின் கொமாண்டோ முகாங்கள்மீது அரசாங்கப் படைகள் தாக்குதல் நடத்தியுள்ளன.

### ஹுசேன் மறுப்பு

ஜோர்டான் இஸ்ரேலுடன் எவ்விதமான இருதரப்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் நடத்தாது என ஜோர்டானிய மன்னர் ஹுசேன் கூறினார்.

ஜோர்டானுடன் பேச்சுவார்த்தை நடத்த இஸ்ரேல் தயாராக இருப்பதாக டெல் அவிவிலிருந்து வெளியிடப்பட்ட செய்தி அறிக்கை பற்றிக் குறிப்பிடுகையிலேயே மன்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேற்காசியாவின் சமாதானத்...

# தி. மு. க. உறவை துண்டிக்க

நடைபெற்ற முதலாவது பெரும்மோதல் இதுவாகும். இந்த உடன்படிக்கையின் படி இர்பிட் பிரதேசத்தை விட்டு இருதரப்பு துருப்புக்களும் வெளியேற வேண்டும் ஆனல் இர்பிட்டிலுள்ள ஜோர்டானியப்படைகளின் நிலையங்கள் மீதும் கட்டிடங்கள் மீதும் பாலஸ்தீனக் கொமாண்டோக்கள் திடீர்

பற்றிக் குறிப்பிடுகையிலேயே மன்னர் மேற்கண்டவாறு தெரிவித்தார். மேற்காசியாவின் சமாதானத் தூதர் டாக்டர் ஜாரிங் தலைமையில் இப் பிரச்னையில் சம்பந்தப்பட்ட அரபு நாடுகளும் சேர்ந்தே இவ்விடயமாகப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமெனவும் அவர் கூறினர்.

## 'செயலாற்றும் சக்திகள் ஐக்கியப் படவேண்டும்'

— குமாரசூரியர்

கோட்டை, செவ்

நாட்டிலுள்ள செயலாற்றும் சக்திகளெல்லாம் ஐக்கியப்பட்டால் நாடு விரைவில் அபிவிருத்தியடைந்துவிடும்.

தபால்தந்தித் தொலைபேசித் தொடர்பமைச்சர் செனட்டர் திரு. செல்லையா குமாரசூரியர் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சின் ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் நாடு பொருளாதார சுபிட்சத்தை யடைய வேண்டுமானல் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு ஒத்துழைக்கவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

வருடாவருடம் தேவையற்ற பெருந்தொகையான கடதாசிகள் வீணுவதை வேறு தொழில்களுக்குப் பயன்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது.

— —

## கிணற்றில் வீழ்ந்து மரணம்

யாழ்ப்பாணம் புதன்

தம்பையா ஆனந்தநடராசா என்னும் இளைஞன் கிணற்றுள் வீழ்ந்து மரணமானர். இச்சம்பவம்நேற்று காலை கல்வியன்காடு அரசவீதியிலுள்ள ஒரு வீட்டில் நடந்தது.

மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் சாட்சிகளை விசாரணைசெய்த பின்னர் விபத்தினுல் ஏற்பட்டமரணமெனத் தீர்ப்பளித்தார்.

## நடவடிக்கை எடுக்கப்பட்டது

பூநகரி, செவ்வாய்

இப்பகுதியில் மலேரியாத் தடை இயக்கத்தினர் டி.டி.ரி. தெளிப்பதினுல்மூட்டைப் பூச்சிகள் வீடுகளில் பெருகி வருவதாகப் பொதுமக்கள் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்து டி.டி.ரியுடன் மூட்டைப்பூச்சி நாசினியும் கலந்து தெளிக்கப்பட்டு வருகிறது.

குறிப்பிட்டார். இம் மகாநாடு நேற்றுக்காலை கொழும்பு மத்தியவங்கி மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இம் மகாநாட்டில் பிரதமர் மேலும் கூறியதாவது:

மாவட்ட நிர்வாகத்தைத் திருத்தியமைப்பதெனை முன்னைய அரசாங்கம் வாக்குறுதியளித்த போதும் அது செயலில் ஒன்றையும் காட்டவில்லை. வெறும் பேச்சிலும் திட்டமிடுதலிலுமே அது காலத்தைப் போக்கியது. மக்கள் அரசாங்கம் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிக்கிணங்க மாவட்ட நிர்வாக சேவையை மாற்றியமைக்கப்போகிறது.

### புதிய மாவட்ட நிர்வாக அமைப்பு

இப் புதிய அமைப்பின் கீழ் பல அடிப்படை மாற்றங்கள் செய்யப்படவுள்ளன. சுகாதார சேவைகளைக் கவனித்தலில் மாவட்ட நிர்வாகம் கூடிய கவனம் செலுத்தும். மக்களோடு அரசாங்கத்துக்கு நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தும் வகையில் பல மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன.

### ஏகாதிபத்தியத்துக்கு முற்றுப்புள்ளி

இதுவரை காலமும் மாவட்ட நிர்வாகம் ஏகாதிபத்திய வாதிகளின் கொள்கைகளைப் பின்பற்றியே அமைந்திருந்தது. இத்தகைய தன்மையினுல்தான் மாவட்ட நிர்வாகம் மக்கள் அரசாங்கம் ஆகிய வற்றிற்கிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை எதிர்காலத்தில் மக்கள் அரசாங்கம் இந்த நிலைமையை நீகடிக்

மூலம் விவசாயத்தை முன்னேற்றுகிறேம். விவசாய அமைச்சர் மேற்கொண்டுள்ள பல திட்டங்களால் விவசாயத்துறை துரித முன்னேற்றமடைகிறது. பிற நாட்டு உணவுப் பொருள்களின் இறக்குமதியை வெகுவாகக் குறைத்துள்ளதல் மக்கள் விவசாயத்தில் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். இயற்கை வளங்களும், நம்

கும் அரசாங்க உத்தேச கூட்டுஸ்தாபனமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளும். றப்பர், தேங்காய் பயிற் செய்கையிலேயே ஏமது பொருளாதாரம் தங்கியிருக்கக்கூடாது. உப உணவுப் பயிர்களை பயிரிட வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆயுர் டாக்டருக்கு ஆணையாளர் அழைப்பு

யாழ்ப்பாணம், புதன்

நெடுந்தீவைச் சேர்ந்த வைத்திய கலாநிதி க. மருதயினுர் சென்ற ஆண்டு மேற்கொண்ட ஆராய்ச்சி வேலைகளில் இதுவரை நான்கு தொய்வு நோயாளிகளும் நான்கு வயிற்ரேட்ட நோயாளிகளும் நான்கு கிரந்தித் தொய்வு நோயாளிகளும் நான்கு சிரங்கு நோயாளிகளும் ஆராய்ச்சிக்குட்படுத்தப் பட்டுள்ளனர்,

இந்த ஆராய்ச்சிகளில் ஆங்கில ஆயுள்வேத சித்த மருந்துகளைப் பிரயோகித்து அவற்றின் பலாபலன்களை அறிவதே நோக்கமாகும்.

யாழ் பெரியாஸ்பத்திரி பிரதம வைத்தியர்களில் ஒருவரான டாக்டர் அன்ரன் ஜயசூரியாவின் அனுசரணையுடன் உருவாக்கிய நீண்ட அறிக்கையை ஆயுள்வேத ஆணையாளரின் வேண்டுதலின்பேரில் ஆயுள்வேத ஆராய்ச்சிநிலைய அதிபருக்கு அண்மையில் அனுப்பிவைக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஆராய்ச்சி நிலைய அலுவல்களைப் பார்வையிடுவதற்காக டாக்டர் மருதயினுரை ஆராய்ச்சி நிலையத்தார் அழைத்துள்ளனர். இதன் பொருட்டு டாக்டர் மருதயினுர் இன்று கொழும்பு செல்கின்றுர்.

## கிழக்குப் பாகிஸ்தானில் காலரா பரவுகிறது

டாக்கா, நவ. 17

கிழக்குப் பாகிஸ்தானில் புயல் பாதித்த பகுதிகளின் கரையோர ஜில்லாக்களில் காலரா கொள்ளை நோய் பரவியுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் நிவாரணங்களைச் செய்வதற்காக கிழக்குப் பாகிஸ்தான் கவர்னர் வைஸ் அட்மிரல் எஸ். எம். அஸ்ஸான், பாதிக்கப்பட்ட தீவு ஒன்றிலேயே தனது முகாமை அமைத்து நிவாரண வேலைகளை நேரடியாகப் பார்வையிட்டு வருகின்றுர்.

இப்புயலுக்குத் தப்பிய மக்களின் நிவாரண வேலைகளுக்காகச் சிட்டகாங்கில் ஓர் அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ. நா. கல்வி கலாச்சார நிறுவனம் 50ஆயிரம் டாலர் பெறுமதியான பொருட்களை அனுப்பிவைத்துள்ளது.

## முருங்கன், அடம்பனில் பொலிஸ் நிலையங்கள்?

யாழ்ப்பாணம், புதன்

மன்னுர்ப் பகுதியில் மேலும் இரு இடங்களில் பொலிஸ்நிலையங்கள்நிறுவப்படவேண்டுமென வட பகுதி பொலிஸ் அதிபர் பொலிஸ் தலைமைப் பீடத்துக்குச் சிபார்சு செய்திருப்பதாக அறியப்படுகிறது.

முருங்கனிலும் அடம்பனிலும் இரு பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவேண்டுமென்றும் இந்த இரு பொலிஸ்நிலையங்களும் அமைக்கப்பட்டால் மன்னுர்ப்பகுதியில்பொலிஸ் இல்லாத பகுதியிருக்க மாட்டாதென்றும் அங்கு தற்காலிக பொலிஸ் நிலைகள் திறக்கப்பட வேண்டியேற்பட மாட்டாதென்றும் யோசனை கூறப்பட்டுள்ளதாம்.

## கரவெட்டி சம்பவம்பற்றி பொலிஸ் விசாரணை

யாழ்ப்பாணம், புதன்

கரவெட்டியில் நடந்த சம்பவங்கள் பற்றி சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியமும், தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத் தலைவர் திரு. எஸ். ரி. என். நாகரத்தினமும் தெரிவித்த புகார்கள் சம்பந்தமாகவும் பொலிசார் மோசமாக நடந்துள்ளனரா என்பது பற்றியும்விரிவாக விசாரணை செய்யும்படி காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டென் திரு. ஜோக்கிமை வட பகுதிப் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் கேட்டிருக்கிறுர்.

பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பிரயாணம் செய்த கார்மீது கைக்குண்டு வீசப்பட்டது சம்பந்தமாகவும் கைக்குண்டுகள் தயாரிக்கப்படுவது சம்பந்தமாகக் கிடைத்த தகவல்கள் பற்றியும் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### 60,000 ரூபா கட்டிட நிதி

நல்லூர், செவ்.

கோப்பாய்த் தொகுதியிலுள்ள புத்தூர் பன்னசிஹ வித்தியாலயம் அச்சுவேலி விபசி வித்தியாலயம், ஆகிய இரு பௌத்த பாடசாலைகளின் கட்டிட வேலைகளுக்கென 60 ஆயிரம் ரூபாவை கல்வி அமைச்சு ஒதுக்கியுள்ளது.

## சுதந்திராவுக்கு ராஜாஜி யோசனை

சென்னை, நவ 17

திராவிட முன்னேற்றக் கழகத்துடனுன ஒத்துழைப்பை சுதந்திரா விலக்கிக் கொள்ள வேண்டுமென ராஜாஜிஆலோசனை கூறியுள்ளார்.

நடக்கவிருக்கும் மாநகர ஆட்சித் தேர்தலில் கம்யூனிஸ்ட்கட்சியுடனும் இந்திரா காங்கிரசுடனும் கூட்டு முன்னணி அமைப்பதற்கு தி. மு. க. உடன்பட்டமையே ராஜாஜியின் இவ்வாலோசனைக்கு காரணமென அரசியல் வட்டாரங்களில் கருத்துத்தெரிவிக்கப்படுகிறது.

1967ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தி மு க, சுதந்திரா, முஸ்லிம்லீக், கூட்டு முன்னணி அமைத்துத் தேர்தலில் போட்டியிட்டு பெருவெற்றியடைந்தது குறிப்பிடத்தக்கது.

## மயானத்தில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், புதன்

சுன்னுகம் மயானத்தில் சிசுவின் சடலமொன்று நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் சம்பந்தமாக சுன்னுகம் பொலிசார் புலன் விசாரணைசெய்து வருகின்றனர்.

— —

## பஸ்கண்டக்டர் கொலை வழக்கு டிசம்பர் 14-க்கு ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, செவ்.

முல்லைத்தீவுப் பகுதியைப் பரபரப்புக்குள்ளாக்கிய பஸ் கண்டக்டர் துரைராசாவின் கொலை வழக்கு மீண்டும் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பதில் நீதிபதி திரு. பி. வி. சேனுதிராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் மாதம் 8ம் திகதி குமுளமுனையில் வைத்து முல்லைத்தீவு இ. போ. ச பஸ் கண்டக்டர்துரைராசாவைக் கொலை செய்ததாக குமுளமுனையைச் சேர்ந்த மயில்வாகனம் தியாகராசா, வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம் ஆகியோர் மீது பொலிசார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முக்கிய பொலிஸ் தரப்பு சாட்சியும் இரு தவணைகள் நீதிமன்றத்துக்குவராததால் பிடிவிருந்தில் தேடப்பட்ட வருமான ஆறுமுகம் செல்லையா இம்முறை கோர்ட்டில் சரணடைந்தார். நீதிபதி சாட்சியை 100 ரூபா பிணையில்செல்ல அனுமதித்தார். கடந்த தவணை எடுக்கப்பட்ட எதிரிகளின் கைவிரலடையாளம் சரியாகயில்லாதபடியால் எதிரிகளின் உள்ளங்கைகளில் அடையாளத்தைக்கொடுக்கும்படி நீதிபதி உத்தரவிட்டு மேல்விசாரணையைஅடுத்தமாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிகள்சார்பில் சிரேஷ்ட வழக்கறிஞர்கள் இம்முறை வரவில்லை புறக்டர் சிவசிறீதரன் ஆஜராஞர் வவனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு டயஸ் பொலிஸ் தரப்பில் ஆஜராகியிருந்தார்.

அம்பாறை தொழில்நுட்ப கல்லூரி

## ஆயுதம் தாங்கிய பொலிஸ் காவல்

கொழும்பு, செவ்.

அம்பாறைகார்டிதொழில் நுட்பக்கல்லூரிப் பகுதியில் ஆயுதம் தாங்கியபொலிசார் தொடர்ந்து காவல் புரிந்து வருகின்றனர்கட்டுபெத்தை தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக அம்பாறை தொழில்நுட்பக்கல்லூரி மாணவர் பகிஷ்கரிப்பு செய்தனர். மாணவர்கள் பெருத்த குழப்பம் ஏற்படுத்தியதைத் தொடர்ந்தேஆயுதம் தாங்கிய பொலிசார் காவல்புரிந்துவருகினறனர். இப்போது அம்பாறை தொழில்நுட்பக்கல்லூரி மூடப்பட்டு, மாணவர்கள் வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (சி பி ஏ)

## கசிப்பு வேட்டையில் நால்வர் சிக்கினர்

### மன்னுரில் சம்பவம்

மன்னுர், செவ்வாய்

நீண்டகாலமாக நடைபெற்றுவந்த கசிப்புக் குகையைப் பொலிசார் முற்றுகையிட்டு, கசிப்புத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த மூன்று பெண்களையும் ஒரு ஆணையும் கைதுசெய்தனர்.

மன்னுர்ப் பட்டினத்தின் ஒரு பகுதியில் நடைபெற்ற இக்கசிப்பு வேட்டையை மன்னுர் பொலிசைச்சேர்ந்த சார்ஜன்ட் பி எஸ் ஜெயவர்த்தன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்று நடத்தியது, இது சம்பந்தமாக கைதுசெய்யப்பட்ட மூன்று பெண்களும் மற்றொருவரும் பொலிஸ்நிலையம் கொண்டுசெல்லப்பட்டு பின் பிணையில் விடப்பட்டனர்.

இவ் வேட்டையின்போது சுமார் ஆறு கலன் சட்டவிரோதமாக தயாரித்த வடிசாராயம், 45 கலன் கோடா ஐந்து பெரிய பீப்பாக்கள் மற்றும் வடிசாராயம் தயாரிப்பதற்கான உபகரணங்களையும் பொலிசார் கைப்பற்றினர். விசாரணையின் போது மேற்படி நான்கு சந்தேக நபர்களும் நீண்டகாலமாக இச் சட்டவிரோதச் செயலைச் செய்துவந்ததாக அறியப்பட்டுள்ளதாம்,

......

## 'நிதியுதவி அளிக்கவும்'

அனுராதபுரம், செவ்.

திருக்கேதீச்சரம் புகைவண்டி யாத்திரிகர் தொண்டர்சபையின் முத்திரையிட்ட நிதி வசூல்பத்திரம் கொண்டுவருபவர்களுக்கு நிதியுதவியளிக்குமாறு சபைப்பொதுச் செயலாளர் பொன் தியாகராசாவேண்டுகோள் விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்யூனியனிடமிருந்து ரூபா 5 கோடிக்கு கடன் உதவி

## இலங்கரத்னு விஜயத்தின் பயன்

கொழும்பு, செவ்

சோவியத் ரஷ்யாவிடமிருந்து 5 கோடி ரூபாவும் யூகோஸ்லாவியின் இன்கா கம்பனியிடமிருந்து 60 லட்சம் ரூபாவும் இலங்கைக்கு கடனுதவியாகக் கிடைக்கவிருகின்றது. சோவியத் ரஷ்யாவிடமிருந்து இலங்கை ஆகாயவிமானம், ஹெலிகோப்டர்களை இக்கடனுதவியின்கீழ் வாங்கவிருக்கின்றது. சோவியத் ரஷ்யா கிழக்கு ஜெர்மனி, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்குச் சென்று வர்த்தக உறவைப் பலப்படுத்திவிட்டுத் திரும்பிய உள்நாட்டு வெளிநாட்டு மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின இத்தகவலை வெளியிட்டார்.

இவர் தனது ஐரோப்பிய பயணம் பூரண வெற்றிகிட்டியதாகவும், சோஷலிச நாடுகளுடன் இலங்கையின் வர்த்தக உறவு பலப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இந் நாடுகள் இலங்கையின் பொருளாதாரக் கஷ்டத்தை நீக்குவதில் சிரத்தைகொண்டுள்ளன எனவும், இலங்கையுடனை நட்புறவை அதிகரித்துக்கொள்வதில் நாட்டம் கொண்டிருப்பதாகவும் வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின தெரிவித்தார்.

திரு. இலங்கரத்தின தலைமையில் சென்ற தூதுகோஷ்டியில் உள்நாட்டு வெளிநாட்டு அமைச்சு நிரந்தரக் காரியதரிசி கலாநிதி கியூ. பி. கெலிகம, சிரேஷ்ட உதவிக்காரியதரிசி திரு. ஜி. பெர்னண்டோ, அமைச்சின் அலுவலகத்தைச் சேர்ந்த திரு: பி. கன்னிகம ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

சோவியத் ரஷ்யா கடந்த காலத்தைவிட இலங்கையின் தேயிலையை அதிகமாக வாங்கும். 1969ம் ஆண்டு 2000 தொன்னும் 1970ம் 2000 தொன்னும் ரஷ்யா வாங்கியது. ஆனல் 1971ம் ஆண்டு 4000 தொன்னும் 1972ம் ஆண்டு 5000 தொன்னும் வாங்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

மற்றும் 500 லட்சம் ரூபா கடனை 10 வருடத் தவணையில் 3 வீத வட்டியில் இலங்கைக்கு ரஷ்யா கொடுத்துதவி உள்ளது. இக் கடனுதவியின் கீழ் இயந்திரங்கள், இயந்திர உலைகள், தொழிற்சாலை விரிவு படுத்தும் உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் ஆகியன கொடுத்துதவும்

இலங்கையிலிருந்து ரஷ்யா சேட்டுகள், விரிப்புகள், அடைக்கப்பட்ட பழங்கள், மூக்குகண்ணுடி பிரேம், தேங்காய் எண்ணெய் ஆகியவற்றை அதிகமாக இறக்குமதி செய்யும்.

கிழக்கு ஜேர்மனியுடனை கடன் 6 வருட காலத்தில் இருந்து 8 வருட காலத்திற்கு நீடிக்க கி. ஜேர்மனி இணங்கியுள்ளது மற்றும் இயந்திர வகைகள், உர உற்பத்திஇயந்திரம், மூலப் பொருட்கள், அரிசி ஆலையந்திரம், உதிரிப்பாகங்கள் என்பனவும் கிழக்கு ஜேர்மன் உதவியாகக் கொடுக்க சம்மதித்துள்ளது

மேலும் உறவை விருத்தி செய்ய இருநாடுகளுக்குடனை வர்த்தகப் பேச்சு வார்த்தை ஜனவரியில் நடைபெற விருக்கின்றது.

யூகோஸ்லெவகியா இலங்கையுடனை வர்த்தக உறவை அதிகரிக்கும் அல்லாமலும் தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு உதவுவதற்கும் இலங்கை மாணவருக்கு தொழில்லுப்பயிற்சி அழிக்கவும் இணங்கிஉள்ளது.

## வரி விளம்பரம்

இணுவில் புகையிரத நிலையத்தில் இருந்து 200 யாருக்குள், உரும்பிராய் வீதியில், சாந்தி தோட்டத்திற்குக் கிழக்குப் பக்கமாய் உள்ள தெருப்பக்கக் காணி 7 1/2 பரப்பு விற்பனைக்குண்டு. N. மார்க்கண்டு, மாநகராட்சிமன்ற உறுப்பினர், 82/3, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 2511

### ஓவியர்

ஓவியச் செல்வன் துரைச்சாமி 50வருடங்களுக்குமுன் கீரிமலை - சிறுப்பர் மடத்திலும் செட்டிமாரின் கடைகளிலும், கிட்டங்கிகளிலும் சிறந்த சுவரோவியங்கள் தீட்டிய ஓவிய நிபுணர் துரைச்சாமியைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அறியத்தரவும் ஏ. ஈ. தம்பர், 95, பிரதான வீதி. யாழ்ப்பாணம். 2515

### திருமண அழைப்பு

சண்முகசுந்தரம்
வசந்தகோகிலம்

உடுப்பிட்டி சந்தைவீதி திரு. கிருட்ணசாமி, திருமதி கிருட்ணசாமியின் கனிஷ்ட புதல்வன் சண்முகசுந்தரம் நீர்ம்பாசன பொறியியலாளர் கொழும்பு 7) அவர்கட்கும் கொக்குவில் ஸ்டேசன் ரேட் "இராஜேஸ்வரி மாளிகை" திரு: தா. க. சிவராமலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி வசந்தகோகிலம் அவர்கட்குல் சாதாரண வருடம் கார்த்திகை மாதம் 3-ம் திகதி (19-11-70) புதன்கிழமை இரவு 1 மணி 40 நிமிடம் முதல் 3 மணி 40 நிமிடம் வரையிலுள்ள கன்னி லக்கின சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடைபெறும்' உற்றூர் உறவினர் யாவரும் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 2513

### லொறி மோதியது

கைதடி, சனி

லொறி மோதியதால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவரின் தலையில் பலத்த காயமேற்பட்டது. இச்சம்பவம் அரியாலையில் நடந்துள்ளது. காயமடைந்த வீ, நாகராசா யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### திருமண அழைப்பு

எமது புதல்வி ஜெயஸ்ரீதேவிக்கும், உரும்பராய் சிவஸ்ரீ வை. சபாரத்தினக் குருக்கள் தம்பதிகளின் புதல்வன் பரமேஸ்வரசர்மாவுக்கும் நாளை (19-11-70) வியாழக்கிழமை பகல் 12-00 மணிக்கும் 1-00 மணிக்குமிடையில் திருமணம் நிகழும். சுற்றத்தினரையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். இ. சோமாஸ்கந்தக் குருக்கள் தம்பதிகள், வெங்கடேசவரதராஜப்பெருமாள் கோவில், யாழ்ப்பாணம். 2518

### கூட்டுப் பிரார்த்தனை

தாவடி, செவ்வாய்

கொக்குவில் மேற்கு சைவ வாலிபர் சங்கத்தினரால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை மண்டபத்தில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்தப்பட்டு வருகிறது.

### இரத்த தானம்

மாவிட்டபுரம். செவ்.

அளவெட்டி அருணோதயாக்கல்லூரி மாணவ, மாணவிகள் இரத்ததானம் செய்தார்கள். இம்மாணவ மாணவிகளுக்கு யாழ். அரசினர் ஆஸ்பத்திரி இரத்த வங்கி இலவச குருதிசான்றிதழ் வழங்கியது.

### அனுராதபுரத்துக்கு விரைவில் நகரசபை

அனுராதபுரம், செவ்.

அனுராதபுரம் நகரசபை ஒன்றின் ஆட்சியின்கீழ் கொண்டுவர இருப்பதைத் தொடர்ந்து அனுராதபுர நகரம் பதினொரு வட்டாரங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

### வேலைகள் ஒத்திவைப்பு

கைதடி, சனி

கைதடி மேற்கு ஊரியான் குடியேற்ற திட்ட வீதி வேலைகள் பின்போடப்பட்டுள்ளது. இவ்வேலை இம் மாதம் 12-ம் தேதி யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு சபாரத்தினம் தலைமையில் நடைபெறவிருந்தது.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 18-11-70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை. 1-00 கதம்ப இசை

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளைய சந்ததி

இரவு 6-15 வாத்திய இசை 6-30 நாட்டுப்பாடல்கள், 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 ஐ நா சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தி தொகுப்பு.

### சுழிபுரம் வெற்றி

சுழிபுரம், செவ்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆரம்ப பிரிவுகோஷ்டிக்கும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கோஷ்டியினர் 2—1 கோல்களால் வெற்றி பெற்றனர் போட்டி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது திரு. கே. இராமநாதன் மத்தியஸ்தராக கடமையாற்றினர்.

### உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

### உபதலைவர் ராஜினமா

கைதடி, புதன்

கைதடிகிராமசபையின் 3-ம் வட்டார அங்கத்தவர் திரு ஆர். சிதம்பரன் உபதலைவர் பதவியிலிருந்து 2-வது முறையாக ராஜினமாச் செய்துள்ளார். இவர் இரண்டரை வருடங்களுக்குள் மூன்றாவது முறை கைதடி கிராமசபையின் உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவராவர்.

### சிவதீட்சை பெற்றனர்

உதைபந்தாட்டம்

### மன்னரில் அ. இ. பொலிஸ் கோஷ்டிக்கு வெற்றி

மன்னர், செவ்வாய்

மன்னர் சனசமூக நிலைய உதைபந்தாட்டக் கோஷ்டியும் அகில இலங்கை பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டியும் மன்னரில் மோதிக்கொண்டன. புனித சவேரியர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இம் மோதலில் பொலிஸ்கோஷ்டி வெற்றியீட்டியது.

ஆட்டம் ஆரம்பத்திலேயே பொலிஸ் கோஷ்டியிடம் விறுவிறுப்புக் காணப்பட்டது அதற்கு எவ்வகையிலும் சளைக்காமல் ஈடுகொடுத்து சனசமூக நிலையக் கோஷ்டி விளையாடியது.

### வவனியா எம். பி, க்கு வரவேற்பு

முல்லைத்தீவு, செவ்வாய்

வவனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சே. மா. செல்லத்தம்புவுக்கு நேற்று அளம்பில் மக்களால் பிரமாண்டமான முறையில் ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்பு வைபவத்தில் பலர் அவரின் குறுகியகால சேவைகளைப் பாராட்டிப் பேசினர்.

### பஸ் சேவை

## வலைப்பந்தாட்ட சம்பியன்



பெண்கள் கல்லூரிகளுக்கிடையில் யாழ். மாவட்டத்தில் நடந்தேறிய வலைப்பந்தாட்டப் போட்டியில் சீனியர் பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரி 'சம்பியனை' வெற்றியீட்டியுள்ளது. யாழ் மாவட்ட வலைப்பந்தாட்ட வெற்றிக் கேடயத்தை உடுவில் மகளிர்கல்லூரி கைப்பற்றியுள்ளது இத்தொடரில் நடந்தேறிய இறுதிப் போட்டி வேம்படி மகளிர் கல்லூரிக்கும் உடுவில் மகளிர்கல்லூரிக்குமிடையில் இராமநாதன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

உடுவில் யுவெனைல் குழுவினரும் சீனியர் குழுவினரும் இம்முறை சம்பியனைகவத்தன.

## 'தாமும் நாடும் பயன்பெற மாணவர்உழைக்கவேண்டும்'

— பேராசிரியர் மயில்வாகனம்

சுழிபுரம், செவ்வாய்

"அன்பு, பண்பு, நல்லொழுக்கம் ஆகியஉயர்ந்த லட்சியங்களைக்கொண்டு ஒவ்வொரு மாணவனும் தத்தமது வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்ளவேண்டும். வாழ்வுக்கு பயன்படும் கல்வியைக்கற்று கடும்உழைப்பைக்கொண்டு முன்னேற வேண்டும். தமிழ்மக்கள் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்த்து காலத்தை வீணேபோக்காது தத்தமது உழைப்பில்கவனம்செலுத்த வேண்டும். கற்கும் கல்வி தமக்கும் நாட்டுக்கும் நன்கு பயன்படவேண்டும்.

இவ்வாறு சுழிபுரம விக்ரோறியாக் கல்லூரி மேல் வகுப்பு மாணவர் வருடாந்த விருந்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரை

...கத்தை எதிர்பார்க்காது தமது சொந்தப் பலத்திலேயே கருமங்கள் நிறைவேற யாவரும் உழைக்க வேண்டும் அப்போதுதான் முன்னேறமுடியும் என்றார்.

### ஒலியைவிட இருமடங்கு வேகம்

மாஸ்கோ. நவ. 17

ஒலியைவிட இரண்டு மடங்கு வேகத்தில் பறக்கும் விமானம் ஒன்றைத் தயாரித்து வெற்றிகரமாக சோதித்திருக்கின்றது சோவியத் யூனியன்.

16960 மீட்டர் உயரத்துக்கு இந்தவிமானம் பறந்ததாகவும், இதில் 120 பேர் பிரயாணம் செய்யமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ராஜா (யாழ்ப்பாணம்) ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா! சோ—மனோரமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ—மனோரமா
நடித்த

# செல்லப்பெண்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்

எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா —அசோகன்
நடித்த

# மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

ஜெமினி-சரோஜாதேவி
சோ-மனோரமா
நடித்த

# ஐந்து லட்சம்

## வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி

கெப்பிட்டல் (கொழும்பு)    பிளாஸா (வெள்ளவத்தை)

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த

# உயர்ந்த மனிதன்

கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.


## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

முசலி, செவ்வாய்

மன்னூர்க் காரியாதிகாரி பிரிவில் இவ்வார இறுதி தொடக்கம் ஒரு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவிருக்கிறது, இச் சுற்றுப் போட்டியில் ஆறு கழகங்கள் பங்குபற்றுகின்றன. இதற்கான ஏற்பாடுகளை மன்னூர் பதில்காரியாதிகாரி திரு. கே. மாணிக்கவாசகரும், விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எம். ஜீவரத்தினமும் செய்துவருகின்றனர்.

......

## 21-ம் தேதி பரீட்சை

உடுப்பிட்டி, செவ்வாய்

மக்கள் வங்கியின் எழுதுவினைஞர் தரம் 6 க்கான பரீட்சை இம்மாதம் 21 ம் திகதி கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. அதற்குரிய அத்தாட்சிப்பத்திரம் விண்ணப்பகாரர்களுக்கு அனுப்பப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா ,பிரீபோயா 2-30
எம். ஜி. ஆர்—ஜெயலலிதா
நடித்த

### முகராசி

## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 10-00
போயா நாட்கள் 2-30
ஜெமினி- சரோஜாதேவி
நடித்த

### பனித்திரை

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya days 4 shows
Kerwin Mathews
in
CRACK IN THE WORLD

**REGAL**
Jaffna
Daily 4-45, 7 & 9-45
Poya days 4 shows
Omar Sharif
Julie Christie
in
DOCTOR ZHIVAGO


வராவர்:

## சிவதீட்சை பெற்றனர்

தாவடி, செவ்வாய்

கொக்குவில் மேற்கு ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை தலைமையாசிரியர் திரு தருமலிங்கத்தின் தலைமையில் சிவஸ்ரீ கல்யாணசுந்தரக் குருக்களால் சிவதீட்சை வைக்கப்பட்டது பல மாணவர்கள் தீட்சை பெற்றனர்.

## கணேச விளையாட்டு கழகமும் கலந்துகொள்ளும்

தாவடி, செவ்வாய்

வலிகாமம் வடக்கு காரியாதிகாரி பிரிவில் நடைபெற விருக்கும் விளையாட்டுப்போட்டிகளில் "தாவடி ஸ்ரீ கணேச" விளையாட்டுக் கழகமும் கலந்து கொள்ளவிருக்கிறது.

## அருணகிரிநாதர் விழா

தாவடி, செவ்வாய்

யாழ். இசை அபிவிருத்திச் சபையினரால் இம்மாதம் 20, 21-ந் திகதிகளில் யாழ். கில்னர் மண்டபத்தில் அருணகிரிநாதர் விழா கொண்டாடப்படவிருக்கிறது

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்வாய்

பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூகநிலையபொதுக் கூட்டம் நிலையத் தலைவர் திரு. எஸ். மாணிக்கம் தலைமையில் நிலைய வாசிகசாலையில் நடைபெற்றது.

நிலையத்தின் புதிய நிர்வாகிகளாகபின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். மணிக்கம் உபதலைவர்: இ. சிவப்பிரகாசம் காரியதரிசி கே. இராசரத்தினம் உபகாரியதரிசி: பி. பத்திநாதர் தனாதிகாரி என். எம். கந்தசாமி உபதனாதிகாரி: என். கனகரத்தினம் நிர்வாகசபையினர் த. கந்தசாமி வி. குமாரசாமி வ. விசுவலிங்கம்

## ஆலோசனைக் கூட்டம்

வேலணை, செவ்வாய்

வேலணை கிராமசபை எல்லைக்குள் வரிவிதிப்பதைநடைமுறைப்படுத்துமுன் மக்களின் ஆலோசனையைப் பெறும்பொருட்டு, வேலணை கிராமசபை மண்டபத்தில் கிராம சபைத் தலைவர் திரு க. சதாசிவம் தலைமையில், கூட்டம் நடைபெற்றது.

பட்டது அதற்கு எவ்வகையிலும் சளைக்காமல் ஈடு கொடுத்து சனசமூக நிலையக் கோஷ்டி விளையாடியது.

ஆனால் வெகு சீக்கிரத்திலேயே பொலிஸ் கோஷ்டி கோல் ஒன்றைப் போட்டு எதிர்க்கோஷ்டிக்குச் சவால் விட்டது- சனசமூக நிலையக் கோஷ்டியும் சும்மாயிருக்கவில்லை. உடனடியாக பதில் கோல் ஒன்றைப் போட்டு நிலைமையைச் சீராக்கியது

ஆட்டம் வெகு விறுவிறுப்பாகவிருந்தாலும் வாய்ப்புகள் பொலிஸ் கோஷ்டிக்கே அதிகமிருந்ததாக அறிய முடிந்தது. இடைவேளை வரை பொலிஸ் கோஷ்டி இரு கோல்களைப் போட்டு வெற்றிவீரனாகத் திகழ்ந்தது.

மீண்டும் ஆட்டம் தொடங்கியபோதுபொலிஸ் கோஷ்டி அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டது.

பின்னர் சனசமூக நிலையக் கோஷ்டி ஒருகோல் போட்டது. கடைசியாகப் பொலிஸ் கோஷ்டி மேலும் இரு கோல்களைப் போட்டு அபார பாராட்டுகளைப்பெற்றது;

முடிவில்பொலிஸ்கோஷ்டி நான்கு அதிகப்படியான கோல்களால் வெற்றி பெற்றது.

......

## இடமாற்றம்

முசலி, செவ்வாய்

முசலிக் காரியாதிகாரிபிரிவைச் சேர்ந்த காணி அபிவிருத்திப் பகுதி மேற்பார்வையாளர் திரு. த. சிதம்பரப்பிள்ளை அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து முல்லைத்தீவுக் காரியாதிகாரி பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## உபதபால் நிலையம் நிறுவுக

அம்பன், புதன்

பருத்தித்துறைச் சந்தைப் பகுதியில் உபதபால் நிலையமொன்றை நிறுவுமாறு பருத்தித்துறை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக்கிளை தபால் மந்திரியை கோரியுள்ளது.

......

## நாவலர் திருநாள்

காரைநகர், செவ்

இம்மாதம் 31-ந் திகதி காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் நாவலர் திருநாள் கொண்டாடப்படவிருக்கிறது

நாவலர் சமயத்தொண்டு என்னும் பொருள் பற்றி வித்துவான் க. முருகேசனார் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்

ட்டிப் பேசினர்.

......

## பஸ் சேவை விஸ்தரிப்பு

பண்டத்தரிப்பு புதன்

பலாலியிலிருந்து இளவாலை வரை நடைபெற்றுவந்த பஸ்சேவை பண்டத்தரிப்புச் சந்திவரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

......

## கிராமசபை தேர்தல்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராமசபையின் பொதுத்தேர்தல் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் நடைபெறவிருக்கிறது.

வகுப்பு மாணவர் வருடாந்த விருந்தில் பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய இளைப்பாறிய பேராசிரியர் டாக்டர் ஏ. டபிள்யு மயில்வாகனம் குறிப்பிட்டார். மன்றத் தலைவர் செல்வன் என். சிவராசா வைபவத்துக்கு தலைமைவகித்தார்.

பேராசிரியர் மயில்வாகனம் தொடர்ந்து மேலும் பேசுகையில் மாணவர்கள் தம்மையும் தமது நாட்டையும் நன்குநேசிக்கவேண்டும். அதேபோல் தாமும் நாடும் முன்னேற உழைக்கவேண்டும். இந்த நாட்டின் முன்னேற்றம்மாணவர்களுடைய வருங்கால உழைப்பிலேயே தங்கியுள்ளது. அரசாங்

தாகவும், இதில் 120 பேர் பிரயாணம் செய்யமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.

... ...

மத அலுவல்களுக்கு

## புதிய இலாகா

கோட்டை, செவ்.

மதசம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க புதிய இலாகாவொன்றை நிறுவ கலாச்சார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்விலாகா சமயசம்பந்தமான வைபவங்களுக்கு அரசாங்கம் உதவி செய்தல், சமயப் பரீட்சைகள் நடத்தல், சமய புனரமைப்பு வேலைகள் ஆகியனவற்றை மேற்கொள்ளும்.


# தற்பொழுது அச்சில்

★ ஈழநாடு தினக்குறிப்பு 1971

★ Eelanadu Pocket Diary 1971

★ கலண்டர் 1971

1971-ம் ஆண்டுக்குரிய 'ஈழநாடு' தினக்குறிப்பில் புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- ★ புதிய அரசாங்கம் பற்றிய தகவல்கள்.
- ★ சரித்திர சம்பந்தமான விடயங்கள்.
- ★ புவியியல், பொது அறிவு, விஞ்ஞானம் ஆகியவற்றிற்குரிய குறிப்புகள்.
- ★ போயா, அரசாங்க, வங்கி, வர்த்தக விடுமுறைகள் ஆகியன தினக்குறிப்பில் விசேடமாக இடம்பெறுள்ளன.

வியாபாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்

விபரங்களுக்கு: தினக்குறிப்பு 1971
'ஈழநாடு'
தபாற்பெட்டி எண்: 49, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப்பாகிஸ்தான் சூருவளிக் கொடுமை!

# சர்வதேச உதவிக்கு ஐ. நா. தலைவர் செயலாளர் வேண்டுகோள்

நியுயோர்க், நவ 17

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட சூருவளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலகநாடுகள் தங்களாலான உதவிகளைச் செய்யுமாறு ஐ. நா, பொதுச்சபைத் தலைவர் டாக்டர் எட்வாட் ஹம்ரோவும், பொதுக்காரியதரிசி யுதாண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சோவியத்யூனியன் 35 லட்சம் ரூபாவை நிவாரணத்துக்கென அனுப்பிவைத்துள்ளது. பிரிட்டிஷ் விமானங்கள் சிங்கப்பூரிலிருந்து உணவுகளையும், [மருந்துவகைகளையும் கிழக்கு பாகிஸ்தானுக்கு எடுத்துச்செல்கின்றன.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் பாகிஸ்தான் தூதுவர் திரு. ஆலா சாஹி கிழக்குப்பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள அழிவுகள் பற்றியும் உயிர்ச்சேதங்கள் பற்றியும் எடுத்துச்சொன்னர். இதனைத் தொடர்ந்து கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டிடுக்கும் பேரழிவுக்கு நிவாரணம் தேடும்வகையில் உலக நாடுகள் தங்களாலான உதவிகளைச் செய்யுமாறு ஐக்கியநாடுகளின் பொதுசபைத் தலைவர் எட்வாட் ஹம்ரோவும், பொதுக் காரியதரிசி யுதாண்டும், சகல நாடுகளையும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

திரு. ஹம்ரோ பாகிஸ்தான் ஜனதிபதி யாஹ்யாகானுக்கு அனுப்பிவைத்த செய்தியில் கிழக்குப்பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இந்தப் பேரழிவைக் கண்டு உலகமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். அவர்கள் கிழக்குப் பாகிஸ்தானின் நிவாரண வேலைகளுக்குத் தங்களாலான உதவிகளைச் செய்வார்கள் என நம்புகின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இக் கோரச் சம்பவத்திலிருந்து மக்கள் தங்கள் வாழ்வை புதிதாக அமைத்துக் கொள்ள உலகின் பல நாடுகள் நிவாரணஉதவி அளிக்க முன்வந்துள்ளன. ஜெனிவாவிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மருத்துவப் பொருட்களையும் உணவுப் பொருட்களையும் அனுப்பிவைக்க முடிவுசெய்துள்ளது. சோவியத்யூனியன் 35 லட்சம் ரூபாவை அனுப்பிவைத்துள்ளது. ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனமும் உதவி அளிக்க முன்வந்துள்ளது. பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர் அலக்ஸ் டக்ளஸ் ஹியூமனின் உத்தரவின்பேரில் பிரிட்டிஷ் விமானங்கள் சிங்கப்பூரிலிருந்து கிழக்குப் பாகிஸ்தானுக்குஉணவு, மருத்துவப் பொருட்களை எடுத்துச்செல்கின்றன.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்ட சூருவளியால் 20 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக அரசாங்கக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. இதுவரையும் கிடைத்த செய்திகளின்படி 3 லட்சம் பேர் இறந்திருக்கலாமென நம்பப்படுகிறது. ஆனல் 55 ஆயிரம் பேர் இறந்திருப்பதாக அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது பத்துவக்காளியில் மட்டும் 25 ஆயிரம் பேர் இறந்துள்ளதாக அக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 13 தீவுகள் முற்றுக நீரில் மூழ்கியுள்ளதாக அக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சூருவளியால் கோடிக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கச் செய்திகள் தெரிவித்தன.

## தமிழ் எழுத்தாளருக்கு நேரு பரிசு

புதுடில்லி, நவ, 17

தமிழ் எழுத்தாளர் சிதம்பர ரகுநாதனுக்கு இலக்கியத்துக்கான நேரு பரிசு வழங்கப்பட்டது

இங்கு நடைபெற்ற ஒரு விழாவில் அமைச்சர் காரன் சிங் நேரு பரிசில்களை வழங்கினர்.

அம்ரித்லால் நாகர் ("அமிர்தமும் விஷமும்" இந்தி நாவல்) திருநாத் நதீம் (காஷ்மீரம்) பி. கேசவ தேவ் ("ஸ்டை விட்டார்" மலையாள நாவல், திருமதி விஜய் சௌஹான் (இந்தி) சிதம்பர ரகுநாதன் (தமிழ்), எ. ஜே உத்தம்

## செவிடர்களுக்கென

## சிரியாவிற்கு புதிய அரசியல் திட்டம்

### ஐ அ௫, லிபியா, சூடான் ஆகியவற்றுடன் இணைவதற்கு விருப்பம்

டமாஸ்கஸ், நவ. 17

சிரியாவில் ஏற்பட்ட இராணுவப் புரட்சிக்குப் பின், ஆளும் கட்சியான பாத்கட்சியில் புதிய தலைமை ஏற்பட்டுள்ளதாக டமாஸ்கஸ் வானெலி ஊர்ஜிதம் செய்துள்ளது.

சிரியாவின் பாதுகாப்பு அமைச்சர் எயர்மார்ஷல் அல் சதாத்தின் திடீர் இராணுவப் புரட்சிக்குப் பின் அங்கிருந்து கிடைத்த ஊர்ஜிதமான முதலாவது அறிவிப்பு இதுவாகும்.

சிரியாவின் ஆளும் பாத் கட்சியில் புதிய தலைமை ஏற்பட்டுள்ளதாக அவ்வறிவிப்புத் தெரிவித்தது ஆனல் அந்தத் தலைமையை ஏற்பவர்கள் யார் என்பது பற்றித் தெரிவிக்கவில்லை. அவ்வறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மூன்று மாதங்களுக்குள் சிரியாவில் மக்கள் சபை ஒன்று அமைக்கப்படும். அந்த மக்கள் சபையால் சிரியாவுக்குப் புதிய அரசியல் திட்டம் உருவாக்கப்படும். எகிப்து, லிபியா, சூடான் ஆகிய நாடுகளுடன் ஒரு சமஷ்டியின் கீழ் இணைவதற்குச் சிரியா கோருமெனக் கூறப்பட்டுள்ளது.

சிரியாவை இராணுவப் புரட்சி மூலம் கைப்பற்றிய அதன் பாதுகாப்பு அமைச்சர் எயர்மார்ஷல் அல் சதாத், பாத் கட்சியில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக, ஜோர்டான் மீது சிரியா இராணுவத் தாக்குதல் நடத்தியபோது சிரியாவின் டாங்கிப்படைக்குப் பாதுகாப்பாகச் செல்லச் சிரியாவின் விமானப் படையை அனுப்புவதற்கு திரு. சதாத் மறுத்துவிட்டார் இவர் ஐக்கிய அரபுக் குடியரசுடன் சமஷ்டியின் கீழ் சிரியா இணையவேண்டும் என்ற கருத்துடையவர்.

## கிழங்குப் பயிர்களுக்கென ஒரு சர்வதேச ஸ்தாபனம்

லண்டன், நவ. 17

இலங்கை - இந்தியா போன்ற உஷ்ணவலய நாடுகளில் அரிசிக்கு அடுத்த பிர[illegible]ன உணவுப் பயிராக வி[illegible]கும் கிழங்கு வகைகளின் உற்பத்தியை விருத்தி செய்வது அவற்றைச்சிறந்த முறையில் பயிர்செய்வது அவற்றின் ஊட்டசத்தியை ஆராய்வது போன்ற பல

## 'பாப்பரசர் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பு[illegible]'

யாழ்ப்பாணம், புதன்

பாப்பரசரால் நடாத்தப் படும் நிகழ்ச்சிகள் யாவற்றையும், அதே நேரத்தில் இலங்கை வானெலி[illegible]ம்

## தொலைபேசி வசதி வேண்டும்

முசலி, செவ்வாய்

முருங்கனிலிருந்து பதினைந்து மைலுக்கப்பாலுள்ள கொக்குப்படையான் என்னும் கிராமத்தில் இருக்கும் உபதபாற்கந்தோருக்குத் தொலைபேசி வசதி இல்லாததால் இங்குள்ள அரசாங்கக்கூட்டுறவுச் கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலாவத்துறைக்கு அவசரமான காரியங்களுக்காக டெலிபோன் செய்ய இயலாமல் கஷ்டமுறுகின்றனர்.

இதனுல் கொக்குப்படையான் கிராமத்திற்கும், உபதபாற்கந்தோருக்கும் தொலைபேசி வசதி செய்து கொடுக்கும்படி மேற்படி கூட்டுத்தாபன ஊழியர்களும், ஏனைய உள்ளூர் வாசிகளும் மகஜர் மூலம் கேட்டுள்ளனர்.

## ஏழைகளுக்கு பகிர்ந்து வழங்குக

முல்லைத்தீவு, செவ்

முல்லைத்தீவு இராணுவ முகாமுக்கு அருகாமையில் உள்ள கிடைச்சிக் குளத்தின் பக்கத்தில் உள்ள முடிக்குரிய காணியைத் தனிப்பட்ட ஒரு நிலச்சொந்தக்காரருக்கு வழங்கவிருப்பது பற்றி இப் பகுதியைச் சேர்ந்த பலர் தங்கள் எதிர்ப்புகளை வவுனியா அரசாங்க அதிபருக்குத் தெரிவித்துள்ளனர்.

இது ஒருசில அதிகாரிகளின் செல்வாக்கால் நடக்கும் செயல் எனவும் இக் காணியை ஏழைகட்கு பகிர்ந்து கொடுக்கும்படியும் தங்கள் மகஜரில் அவர்கள் கேட்டுள்ளனர்.

## நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

இம்மாதம் 21-ம் திகதி காலை நல்லூர் நாவலர் நினைவுநிலையத்தில் ஆறுமுக நாவலர் சபையினரால் நாவ

## 'சைவமே நம்மைக் காக்க வேண்டும்'

— கதிரவேலுப்பிள்ளை எம். பி.

தாவடி, செவ்

"தெய்வத்தைத் தமிழாக்கிஇனிய நற்றமிழை நல் இசையாக்கிப் பாடியுள்ளார்கள், திருமுறைகள் தந்த நாயன்மார்கள் நாம் அவற்றைப் போற்றிப்பயன் பெறுதல் வேண்டும்,

சமயங்களின் அடிப்படை உண்மை ஒன்றுதான் அடிப்படை உண்மையை மனதிற் கொண்டு ஒழுகுதல்வேண்டும்".

இவ்வாறு கோண்டாவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராமமுன்னேற்றச் சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட பௌர்ணமி தின விழாவில் உரைநிகழ்த்திய கோப்பாய் எம், பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை கூறினர்.

திரு. பெ. கனகசபாபதி தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் மேலும்பேசிய திரு. கதிரவேலுப்பிள்ளை குறிப்பிட்டதாவது:-

"ஆசாரத்தில் மாத்திரம் சமயம் தங்கியிருக்கவில்லை வெளி வழிபாட்டினுலும் நாம் இறைவனை அடைந்துவிட முடியாது, உள்ளத் தூய்மையும்அன்பும் இருக்க வேண்டும், அன்பினுல் அறிவினுல் இறைவனுடன் ஒன்றுபடலாம் என்ற உண்மையை சமயங்கள் கூறுகின்றன.

காலவரையறையற்றது சைவம் சைவத்தை நாம் காத்தல் கூடாது சைவம் தான் எங்களைக் காக்க வேண்டும்.

ஆசிரிய

## 'தொழிலின் புனிதத்தை நினைத்து செயலாற்றுங்கள்'

முசலி, செவ்வாய்

'எழுத்தறிவித்தவன் இறைவனுவான்' இதற்கு இலக்கணமாக விளங்கித் தங்கள் தொண்டைச் செய்து வாழ்பவர்களே ஆசிரியர்களாவர் ஆசிரியர் தனது வாழ்க்கையில் ஒரு சந்தனக்கட்டைக்கு ஒப்பாகவே வாழ்கிருர் சந்தனக்கட்டை தான்தேய்ந்து மற்றவர்களுக்காக நன்மையைக் கொடுப்பதுபோல ஆசிரியரும் தனது வாழ்க்கையை மாணவசமுதாய வளர்ச்சிக்காக அர்ப்பணித்துவிடுகிருர்கள். இதனுல் ஆசிரியத் தொழில் மற்றஎல்லாத்தொழிலிலும் பார்க்க சிறந்த தொழிலாகக் கணிக்கப்படுகிறது.

முருங்கன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் மகாநாடொன்றில் உரையாற்றுகையில் முருங்கன் வட்டார கல்வி வித்தியாதிகாரி திரு. வி. சே. ஈஸ்வரபாதம் மேற்கண்டவாறு கூறினர்,

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ஆசிரியர்களாகிய நீங்கள் உங்கள் தொழிலின், புனிதத்தன்மையை மனதில் பதித்து செயலாற்றுவீர்களானல் உங்கள் எல்லோரையும் தெய்வத்தின் நிலைக்கு உங்கள் மாணவர்கள் வைப்பார்கள் எனக் கூறினர்.

அடுத்தமாதம் 6-ம் 7-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும்பரீட்சைக்கான பரீட்சை நிலையங்கள் குறித்தும் பரீட்சை மேற்பார்வையாளர்கள்பற்றியும், ஆசிரியர் இடமாற்றம் பற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

## அம்பாறை ஹார்டி மாணவரும் பகிஷ்கரிப்பு

சாய்ந்தமருது, செவ்வாய்

அம்பாறையில் உள்ள ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சிபெற்று வரும் மாணவர்கள் சில பெற்று வெளியேறும் சகலருக்கும் உடன் வேலைகள் வழங்கவேண்டும் என்பது ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவத்திலிருந்து மக்கள் | போ இறந்திருப்பதாக அர

# செவிடர்களுக்கென விசேஷத் தொலைபேசி

லண்டன், நவ. 17

பொதுமக்கள் நாளாந்தம் பாவிக்கும் தொலைபேசிகளை செவிடர்களும் ஒருவித தடையுமின்றிப் பாவிக்கக் கூடிய வண்ணம் ஒரு புதிய திட்டத்தை உருவாக்கியிருக்கிறது ஒரு லண்டன் கம்பெனி. செவிடர்கள், கையால் எழுதித்தரும் செய்திகளைப் பெற்று, அவற்றை தொலைபேசி மூலம் அனுப்பும் அபாரசக்தி படைத்த இத்திட்டம் 'எலக்ரோரைட்டர்' என்று அழைக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் தொலைபேசியில் காதால் கேட்கக் கூடிய சத்தங்கள் அனைத்தும் செவிடர்கள், கண்ணால் பார்த்துணரக்கூடிய ஒளிச் சைகைகளாக மாற்றப்படுகிறது. இந்த ஒழிச் சைகைகளை மூலமாகக் கொண்டு செவிடர்கள் தாம் அனுப்ப வேண்டிய செய்திகளை யாதொரு சிரமமுமின்றி தொலைபேசி மூலம் அனுப்பி விடலாம்:

இந்தப் புரட்சிகரமான செவிடர்க்கான தொலைபேசியைவிட லண்டனிலுள்ள இன்னுமொரு கம்பனி, சாதாரண தொலைபேசிகளில் காணப்படும் எண் முகப்பு (டயல்) செய்தி வாங்கி (ரிஸீவர்) ஆகிய அம்சங்களற்ற விநோத தொலைபேசி இணைப்பொன்றை அமைத்துள்ளது.

இதனை இயக்குவதற்கு, ஒருவர் தான் விரும்பிய எண்ணை, விசைகளை அழுத்துவது போன்று ஒரு முறை அழுத்தவேண்டும். தொடர்பு கிடைத்ததும் சுவரில் காணப்படும் ஒலிவாங்கிக்குள் பேசவேண்டும். மறுபக்கம் பேசுபவரின் குரல், சுவரில் பதிக்கப்பட்டிருக்கும் ஒலிபெருக்கியில் அவருக்குக் கேட்கும் இம்முழுத் தொலைபேசி இணைப்பும் ஒரு சுவரில் பதிக்கப்பட்டிருக்கும்.

இது மட்டுமல்ல, தற்சமயம் இத்தொலைபேசியைப் பாவிப்பவர் மேலதிக கட்டணத்தைப் போட்டுவிட்டால் இதனுள் இணைக்கப்பட்டிருக்கும் ஒரு இயந்திரம் மிகுதிப் பணத்தை இவருக்குத் திருப்பிக் கொடுத்துவிடும். வலது குறைந்தோருக்கு இத்தொலைபேசி இணைப்பு மிகவும் ஏற்றது.

# தெ. ஆபிரிக்கா மீது கடும் நடவடிக்கை

## ஐ.நா. தர்மகர்த்தாக்கள் சபைவற்புறுத்து

நியூயோர்க், நவ. 17

தென்னபிரிக்காவை தென் மேற்கு ஆசியாவிலிருந்து வெளியேற்றுவதற்கு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி ஐ நா தர்மகர்த்தாக்கள் சபை கமிட்டி பாதுகாப்புச்சபையை வற்புறுத்தியிருக்கின்றது

தென்மேற்காசியா விலிருந்து தென்னபிரிக்காவை வெளியேற்றுவதற்கு இது வரை எடுக்கப்பட்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை. ஐ நா சபை முன்னர் விதித்த காலக்கெடுவையும் எச்சரிக்கைகளையும் தென்னபிரிக்க அரசாங்கம் புறக்கணித்துவிட்டது.

### ரொடீசியா பற்றிய தீர்மானம்

ரொடீசியா சம்பந்தமாக புதிய ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு 5 ஆபிரிக்க நாடுகள் இணங்கியிருப்பதாக பிரிட்டிஷ் பிரதிநிதி அறிவித்திருக்கிறார். ஏற்கனவே ரொடீசியா சம்பந்தமாக 18 ஆபிரிக்க ஆசிய நாடுகள் சமர்ப்பித்த தீர்மானத்தை பிரிட்டன் தனது 'ரத்து' அதிகாரத்தைப் பாவித்து நிராகரித்துவிட்டது

இப்பொழுது புதிதாகத் தாக்கல் செய்யப்பட விருக்கும் தீர்மானத்தில் ரொடீசியாவில் பெரும்பான்மை மக்களின் ஆட்சிக்கு வழி செய்த பின்பே சுதந்திரம் வழங்கவேண்டும் என்று பிரிட்டனை வலியுறுத்தும் அம்சம் நீக்கப்பட்டுள்ளதாம்.

......

# இன்னிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். சங்கீத சபையின் சார்பில் சென்னை இசைப் பேராசிரியர் திரு ரி. கே. கோவிந்தராவின் இன்னிசைக்கச்சேரி நாளை மாலை நல்லூரில் நடைபெறவிருக்கிறது.

திருமதி விஜய் சௌஹான் (இந்தி) சிதம்பர ரகுநாதன் (தமிழ்), எ. ஜே உத்தம் (சிந்த) விஜய் குப்தா மௌரியா (குஜராத்தி) ஆகியோருக்கு இப்பரிசுகள்வழங்கப்பட்டன.

இத்துடன் மேலும் ஒன்பது இலக்கிய கர்த்தாக்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பரிசுக் கமிட்டிக்கு திரு. கே. பி எஸ் மேனன் தலைமைவகித்தார்.

நேரு பரிசு திட்டத்தில் இவ்வாண்டில் குழந்தைகளுக்கான அம்சமும் சேர்க்கப்பட்டுள்ளது

''நேரு பரிசு இந்தியாவில் பிரசுரமாகும் ''சோவியத் லாண்ட்'' சஞ்சிகையால் நேருவின் ஞாபகார்த்தமாக ஸ்தாபிக்கப்பட்ட திட்டமாகும்.

......

# குருஷ்சேவ் மறுப்பு

மாஸ்கோ, நவ. 17

மேற்கு நாடுகளில் தன் பெயரைப் பாவித்துத் தவறுன செய்திகள் அடங்கிய நூல்களைச் சில நிறுவனங்கள் வெளியிட்டுவருவதாக முன்னுள் சோவியத் பிரதமர் திரு நிக்கட்டாவ் குருஷ்சேவ் கண்டனம் தெரிவித்துள்ளதாகசோவியத்செய்தி ஸ்தாபனமான டாஸ் அறிவித்தது.

அவ்விதமான நூல்களைத் தான் எழுதவோ அல்லது எழுதி அந்நாடுகளுக்கு அனுப்பவோ இல்லை என அவர் மறுத்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

— —

# தலைமையாசிரியருக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், புதன்

''மாணவர்கள் நல்லமுறையில் கற்கவேண்டுமானுல் அவர்களுக்குரிய பாடத் திட்டங்களை குறைவாகவும் அதே நேரத்தில் அவர்கள் வாழ்வுக்குரியவற்றை அப்பாடங்கள் தருவதாயும் இருக்கும்படி அமைக்க வேண்டும்''

இவ்வாறு அத்தியார் இந்துக்கல்லூரி கனிஷ்டபகுதி தலைமையாசிரியராய் இருந்துஓய்வுபெறும் திருபே. தம்பையா கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் தமக்களித்த விருந்துபசாரத்திற்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் பே. தம்பையாவைப் பாராட்டி திருவாளர்கள் எஸ். சபாரத்தினம், க. இராசதுரை, த. வேலுப்பிள்ளை மற்றும் பலர் பேசினர்.

[illegible] செய்வது அவற்றைச் சிறந்த முறையில் பயிர்செய்வது, அவற்றின் ஊட்டசக்தியை ஆராய்வது போன்ற பல விஷயங்கள் பற்றி அண்மையில் ஹவாயில் நடைபெற்ற கருத்தரங்குஒன்றின் போது ஆராயப்பட்டது உஷ்ணவலயக்கிழங்குப்பயிர்கள் பற்றியஇந்தச்சர்வதேச கருத்தரங்கில் ஆசிய ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த பல விவசாய நிபுணர்கள் கலந்து கொண்டனர்.

கிழங்குப் பயிர்வகைகளைப் பிரபல்யப்படுத்தி அவற்றில் உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் நோக்கமாக சர்வதேச ஸ்தாபனம் ஒன்றை ஸ்தாபிப்பதென இக்கருத்தரங்கின் போது தீர்மானிக்கப்பட்டது. இந்த நிறுவனம் சர்வதேச உஷ்ணவலய கிழங்குப் பயிர்ச் சங்கம்' என அழைக்கப்படும். இந்த நிறுவனத்தின் ஓர் அம்சமாக தகவல் நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்படும். உஷ்ணவலய நாடுகளிலுள்ள கிழங்குவகைகள் பற்றியும், விஞ்ஞானரீதியில் அவற்றைப் பயிரிடும் முறை பற்றியும் இத்தகவல் நிலையம் தகவல்களை அளித்துவரும்.

கேரளத்திலுள்ள பயிர் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் எம் எல். மக்கூன் இந்த சர்வதேச நிறுவனத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். பிரிட்டனின் உஷ்ணவலய உற்பத்திப்பொருள் நிலையத்தைச் சேர்ந்த பிரபல ஆராய்ச்சியாளரான திரு டி. ஜி. கோர்ஸி இந்நிறுவனத்தின் உப-தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

......

# நீரில் மூழ்கி சிறுமி மரணம்

ஊரதீவு, செவ்.

புங்குடுதீவு- வல்லனையைச் சேர்ந்த சின்னத்துரையின் ஏழுவயதுப் புதல்வி கிணற்றில் விழுந்து மரணமானார். காகிதம் போடுவதற்காகச் சென்றவர் திரும்பிவராததையிட்டு பெற்றோர் நடத்திய தேடுதலின்போது இறந்தவரின் சடலம் கிணற்றுள் கிடக்கக்காணப்பட்டது. மரணவிசாரணை அதிகாரி விபத்து மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

......

# நியமனம்

ஊரைதீவு, செவ்வாய்

புங்குடுதீவு குறிகட்டுவான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைத் தலைமை ஆசிரியராக திரு.சோ. சேனுதிராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

[illegible] பாப்பரசரால் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் யாவற்றையும், அதே நேரத்தில் இலங்கை வானொலியிலும் ஒலிபரப்பவேண்டும் என தகவல் ஒலிபரப்பு அமைச்சரை கேட்டுக்கொள்ளும் தீர்மானம் பாஷையூர் புனித அந்தோனியார்கடல் தொழிலாளர் சங்ககூட்டத்தில் நிறைவேறியது.

பங்குக்குரவர் எஸ். ஏ. மைக்கல்சுவாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இத்தீர்மானத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது. பரிசுத்த பாப்பரசர் இரண்டு மணிநேரம் இலங்கையில் தங்கி அவரால் நடாத்தப்படும் விசேஷ வழிபாட்டு நிகழ்ச்சிகளை இங்குள்ள கத்தோலிக்க மக்கள் யாவரும்கண்டுகளிக்க முடியாதிருப்பதனுல் பாப்பரசரினல் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் யாவற்றையும் இலங்கை வானொலியில் அதேநேரம் ஒலிபரப்ப வேண்டும்.

......

# நல்லூரில் தபால்நிலையம் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர்க்கந்தசுவாமி கோவில் பகுதியில் புதிதாக ஒரு தபால் நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. இத்தகவலை தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் தெரிவித்துள்ளார்.

நல்லூரில் தபால் நிலையமொன்றை அமைக்கும்படி யாழ்ப்பாணம் உதவி மேயர் திரு. ஏ. துரைராசசிங்கம் தபால் மந்திரியைக் கேட்டிருந்தார்.

உதவி மேயருக்கு தபால் மந்திரி அனுப்பியுள்ள பதிலில் நல்லூரில் தபால் நிலையம் நிறுவப்படுமென்றும், அடுத்த நிதியாண்டில் இதற்கான பணம் ஒதுக்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

......

# அல்பேனிய தேசிய தினம்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை - அல்பேனியா நட்புறவுச் சங்கத்தின் சார்பில் அல்பேனியா தேசிய தினம் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் இம்மாதம் 28-ம் திகதி கொண்டாடப்படவிருக்கிறது. பிரதம பேச்சாளராக இலங்கை தொழிற்சங்க சம்மேளன உதவிக் காரியதரிசி ஜனுப் ஏ. சி. எம். சாமி கலந்துகொள்வார்.

இம்மாதம் 21-ம் திகதி காலை நல்லூர் நாவலர் நினைவுநிலையத்தில் ஆறுமுக நாவலர் சபையினரால் நாவலர் குருபூசை நடாத்தப்படவிருக்கிறது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் திரு செ, கதிரேசர்பிள்ளை இரா. குமாரசாமிப் புலவர் ஆகியோர் இக் குருபூசையில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர், திருமுறைஓதல் தேவார பாராயணம் ஆகியனவும் இடம் பெறவுள்ளன.

......

# நல்லிணக்கச் சபைகள் நிறுவுக

வேலணை, செவ்.

இந்நிதியாண்டில் அனலைதீவுக்கும் நயினதீவுக்கும் நல்லிணக்கச்சபைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிஅமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு.ரட்ணசிறீ விக்கிரமநாயக்காவை ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் கடித மூலம் கேட்டுள்ளார்.

......

யாழ் சங்கீதசபை

# இன்னிசைக் கச்சேரி

யாழ்ப்பாணம்,புதன்

நாளை 19-ம் திகதி நல்லூர் செட்டித்தெரு ஒழுங்கையில் சங்கீத கலாநிதி முசிறி சுப்பிரமணியஐயரின் பிரதம சிஷ்யர் சங்கீதசாஸ்திரரத்னகா ரி. கே. கோவிந்தராவ் இலவச விசேஷ இன்னிசைக்கச்சேரியொன்றை அளிக்கவுள்ளார்.

......

# புதியசங்கம்

கிளிநொச்சி, புதன்

இப் பகுதியில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்களை தடுப்பதற்கு பொலிசார் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் நகர பாதுகாவலர் சங்கம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் தலைவராக டாக்டர் எஸ். ஜெயரத்தினமும்செயலாளராக திரு எக்ஸ். ஆர். பிரான்சிசும் தெரிவு செய்யப்பட்டனர்.

... ...

# நியமன தினம்

உடுப்பிட்டி, புதன்

உடுப்பிட்டிக் கிராமசபையின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்த மாதம் 2-ம் தேதி காலை தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

அம்பாறையில் உள்ள ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரியில் பயிற்சிபெற்று வரும் மாணவர்கள் சில கோரிக்கைகளை முன்வைத்தும், அண்மையில் கட்டுப்பெத்தைத் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் செய்த வேலைநிறுத்தத்துக்கு ஆதரவுகொடுக்கும்பொருட்டும் சில நாட்களாக வேலைநிறுத்தம் செய்துவருகின்றனர்.

மேற்படி தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயிற்சிருக்கும் உடன் வேலைகள் வழங்கவேண்டும் என்பது ஹார்டி தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்களின் கோரிக்கைகளில் ஒன்ருகும்.

கட்டுப்பெத்தை தொழில் நுட்பக் கல்லூரியில் இவ்வருடம் அனுமதிக்கப்படவிருந்த 23 முஸ்லிம் மாணவர்களின் தெரிவு சம்பந்தமாகத் தீர ஆலோசனை நடாத்தி முடிவு எடுக்க வேண்டுமென்றும் கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மடு உற்சவத்திற்கு ஏற்ப

# பாடசாலைத் தவணையை மாற்றி அமைக்கவும்"

முசலி, செவ்வாய்

சமீபத்தில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பாடசாலை நாட்கள் அட்டவணையில் இரண்டாம் தவணை மே மாதம் 3-ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதிவரை பாடசாலை நாட்களென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது,

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒருமித்துத் தரிசிக்கும் ரோமன்கத்தோலிக்க புனித ஸ்தலமான மருதமடுத் திருப்பதி ஆவணித் திருநாள் ஆகஸ்ட் 6-ம் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை நடைபெறும். பாடசாலை இரண்டாந் தவணைப் பரீட்சையும் பெரும்பாலும் இத் திருப்பதியின் உற்சவ நாட்களிலேயே நடக்கும்;

இதனுல் கத்தோலிக்க பிள்ளைகள், இக் காலம் பரீட்சை நடக்கும் காலமாயிருப்பதால் அவர்கள் மடுத் திருப்பதித் திருநாளுக்குப் போகமுடியாத நிலைமை ஏற்படுகிறது, எனவேபாடசாலைத் தவணையை இந்த உற்சவ வசதிக்கேற்றபடி மாற்றியமைக்க வேண்டும்.

இவ்வாறு கல்வி இலாகாவைக் கேட்கும் தீர்மானம் மன்னர் கத்தோலிக்கமிஷன் நலன் நோக்குச் சங்கத்தால் நிறைவேற்றப்பட்டது.

......

# பட்டதாரிகள் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை வேலையற்றபட்டதாரிகள் சங்க வடபிரதேசக்கிளையின் பொதுக்கூட்டம் இம்மாதம் 21-ம் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெவிருக்கிறது திரு கே. சதானந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்திற்கு சகலகட்சிப் பிரமுகர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

# 4 மைல் நடக்க வேண்டுமாம்

முசலி, செவ்வாய்

உயிலங்குளத்திலிருந்து மூன்று மைலுக்கப்பாலுள்ள இலந்தை மோட்டை என்னும் கிராமத்தில் வாழும் மக்கள் தமது கிராமத்தில் தபால்பெட்டி இல்லாததினுல் தமது தபால்களைச் சேர்க்க நான்கு மைல் தூரம் நடக்கவேண்டியுள்ளதாம்.

இப்பகுதியில் வாழ்பவர்கள் முஸ்லிம்கள் ஆதலால் முஸ்லிம் பெண்கள் இதனுல் அதிக கஷ்டமடையவேண்டியுள்ளதாம்.

———

# இடமாற்றங்கள்

முல்லைத்தீவு, செவ்,

முல்லைத்தீவு உணவு விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகராகக் கடமைசெய்யும் திரு. முதலித்தம்பி ஜனவரி முதல் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்

0 0 0

சுழிபுரம், செவ்,

வவனியா மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய திருமதி கனகம்மா அப்பாப்பிள்ளை மீண்டும் முன்பு கல்வி கற்பித்த பண்ணுகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்

——

# மகாபாரத புராணபடனம்

தாவடி, செவ்வாய்

தாவடி ஸ்ரீ கணேசவாசிகசாலை மண்டபத்தில் நடைபெற்று வரும் மகாபாரத புராண படன விரிவுரையின் போது ''கிருஷ்ணன் தூது'' என்ற விரிவுரையை திரு. செல்லத்துரை ஆசிரியர் வழங்கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மக்களின் குணப்பண்புகளே சமூக, அரசியல் ஏற்பாடுகள் எல்லாவற்றிற்கும் அடிப்படையான காரணமாகும். ஒரு சமூகம் குணப்பண்புகளில் பெருமை பெறுவது, அந்தச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் நல்லவர்களாய் பெருமைவாய்ந்தவர்களாய் இருப்பதனாலேயாகும்.

— விவேகானந்தர்.


# ஈழநாடு

[illegible] Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna: Telephone: 889.

[illegible] சாதாரண வருஷம் கார்த்திகை மாதம் 3-ந் திகதி (18-11-70)


## சம சம்பளம்

"சுயபாஷா ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு நீக்கப்பட்டு சம சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்" என்று சம்பள சம்பந்தமாக நடைபெற்று வரும் சில்வாக் கமிஷன் விசாரணையில் சாட்சியமளித்த அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் ஏகமனதாக கேட்டிருக்கிறது. ஆசிரியர்களுக்கிடையேயுள்ள சம்பள வேறுபாடு நீக்கப்பட்டு சுயபாஷா ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் சமசம்பளம் வழங்கவேண்டுமென்பது இன்று நேற்று எழுந்த கோரிக்கையல்ல. இது நீண்டகாலக் கோரிக்கையாகும். சமசம்பளக் கோரிக்கை உட்பட ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகள் பல நிறைவேற்றப்படாமலிருந்து வந்துள்ளன. ஆசிரியர்கள் பல பல சங்கங்களாகப் பிரிந்து வேறுபட்டு நின்றது இதற்கு முக்கிய காரணமென்று சொல்லலாம். இப்போது நிலைமை பெருமளவில் திருந்தியிருக்கிறது. சர்ச்சைக்குரிய சில பிரச்னைகளை ஒதுக்கி வைத்துவிட்டுப் பொதுவான விஷயங்களில் ஆசிரியசங்கங்கள் ஒன்றுபட்டுள்ளன. இந்த வகையில் ஆசிரிய சம்மேளனம் தனது முயற்சியில் பெருமளவு வெற்றிபெற்றிருக்கிறதென்றே சொல்ல வேண்டும்.

அந்நியரின் ஆட்சியின் போது ஆங்கிலம் படித்தவர்களுக்கும் ஆங்கிலம் போதிக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் விசேஷ சலுகை அளித்தனர். நாடு விடுதலையடைந்து இந்நாட்டு மக்களின் மொழிக்கு உரிய கௌரவம் அளிக்கப்பட்டுள்ள இந்தக் காலத்திலும் சுயபாஷை ஆசிரியர்களைக் குறைந்த தரத்திலும் ஆங்கில ஆசிரியர்களை உயர்ந்த தரத்திலும் சம்பள விகிதத்தில் கணிப்பது எந்தவகையிலும் நியாயமாகாது.

ஆசிரியர் பயிற்சிக்காலம், தராதரம் ஆகியவைகள் சம்பந்தமாக சுயபாஷா ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்குமிடையில் உள்ள வேறுபாடுகளை நீக்குவது கஷ்டமல்ல. இதற்காக சம்பளவேறுபாடு நீடிக்கவேண்டியது அவசியமல்ல.

சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இன்றைய அரசாங்கம் சுயபாஷா ஆசிரியர்களுக்கும் ஆங்கில ஆசிரியர்களுக்கும் சமசம்பளம் வழங்கி எதிர்கால பிரஜைகளை உருவாக்கும், ஆசிரிய சமூகத்தில் சமத்துவம் ஏற்பட வழிவகுக்குமென்று எதிர்பாக்கலாம்.

## கைத்தொழில் பேட்டை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைத் திட்டத்தைத் துரிதப்படுத்திபூர்த்தியாக்கும்படி கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரைக் கோரும் தீர்மானம் வட இலங்கை வர்த்தக கைத்தொழில் கூட்டுத்தாபன சபைக் கூட்டத்தில் நிறைவேற் [illegible]

கம் செய்பவற்றை அதன்பின் ஆட்சிக்குவரும் திரு. டட்லியின் தலைமையிலான அரசாங்கம் குறை கூறுவதும் பழகிப்போன விஷயம். இது கட்சி அரசியல் அமைப்பிலுள்ள குறைபாடாக இருக்கலாம்.

ஆனாலும் யார் எதைச் [illegible]



# இன்று இசை அரங்கேற்றம்

செல்வி புஷ்பகாந்தி இராசையாவின் இசை அரங்கேற்றம் இன்று மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறுகிறது.

செல்வி புஷ்பகாந்தி இராசையா கோப்பாயைச்சேர்ந்தவரும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்திலிருந்து இளைப்பாறிய அதிபருமான திரு த. இராசையா அவர்களின் இரண்டாவது புத்திரியாவார்.

தமது இளமைப் பருவத்திலேயே இவர் இசை, நடனம் நாடகம், பேச்சுவிளையாட்டு முதலியவற்றில் ஆர்வம் கொண்டு பல நிகழ்ச்சிகளில் பங்குபற்றிப் பரிசுகளும் பெறுள்ளார். பின்பு கோப்பாய் ரசிக கலாமன்றத்தின் ஆரம்ப மாணவிகளில் ஒருவராக இசைபயிலும்வாய்ப்பினைப் பெற்ற இவர் தொடர்ந்து 5 வருடகாலம் வாய்ப்பாட்டில் சங்கீதபூஷணம் ஐ. கணபதிப்பிள்ளை சங்கீதபூஷணம் எஸ். வேலாயுதபிள்ளை, ஆகிய ஆசிரியர்களிடம் தேர்ச்சி பெற்ருர்.

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய இசைப் பரீட்சையில் 4-ம் ஆண்டு பாடத்திட்டத்தினைப் பூர்த்தி செய்ததுமல்லாமல் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்த தோடு இசையை ஒரு பாடமாக எடுத்து அப் பாடத்திலும் விசேட சித்திபெற்று1966ம் ஆண்டு சென்னை சென்று அடையாறில் உள்ள மத்திய இசைக் கல்லூரியில் சேர்ந்து படித்து சங்கீதவித்துவான் பரீட்சையில் சித்தியடைந்ததுடன் சென்னை மியூசிக் அகடமி இசை ஆசிரியர் பயிற்சியிலும் தேர்ச்சிபெற்ருர். இலங்கையிலிருந்துஇந்தியா சென்று இசை பயின்ற மாணவிகளில் வயதில் மிக வும் இளையவரென்பதும் சங்கீத சாஸ்திர ரத்திஞகர டி. கே. கோவிந்தராவிடம் வாய்ப்பாட்டு பயிலும் பாக்கியம் பெற்றவரென்பதும் மிருதங்கம் வாசிக்கவும் பயின்றுள்ளாரென்பதும் குறிப்பிடத்தக்கது

நாவலர் நினைவுக் கட்டுரை

# நாவலர்பெருமானின் அருங்குணங்கள்

— ச. அம்பிகைபாகன் —

குணமெதும் குன்றேறி நின்ற நாவலர் அவர்களின் அருங்குணங்களைப் பற்றிச் சிந்திக்கக்கிடைத்த வாய்ப்பைப் பெரும்பேருகக்கருதுகிறேன். அவர்களிடம் அறுபத்து மூன்றுக்கு மேற்பட்ட அருங்குணங்கள் காணப்பட்டதாக அம்பலவாண நாவலர் அவர்கள் தமது "சற்குரு மணிமாலை" என்னும் நூலுக்கு எழுதிய முக [illegible]

அவர்களின் கடும்பகைக்காளானுர் ஆறுல் நாவலர் அவர்கள் இப்பகையை ஒரு பொருளாக மதிக்கவில்லை. இறைவனுக்கு தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் அர்ப்[illegible]த்த படியால் "அஞ்[illegible]" மில்லை அஞ்ச[illegible] யெனவாழ்ந்தார். இவ்வஞ்சாமை பற்றி நாவலர் [illegible]

உறவு முதலியவற்றை பற்றிச் சிந்தித்தது கிடையாது தமது தமையன்மார் முதலியார் செய்தகுற்றங்களை பல முறை வெளிப்படையாகக் கண்டித்துள்ளார்கள் தமது பகைவரிடத்தில்- கிறி[illegible] [illegible] முதலியோரிடத்தில்- [illegible] குணங்களைப் பாராட்டியுள்ளார்.

நாவலர் அவர்கள் மிகவும் [illegible]

ஏதுக்கள் காட்டி நிலைநாட்டியுள்ளார்.

நாவலர் அவர்கள் தமது திருக்கோவையார் பதிப்பில் காணப்படும் அனுபந்தமொன்றில் தமிழ்மொழியை "எம்மொழியிலும் இனிய நமது தமிழ்மொழி" எனக் கூறியுள்ளார். இவர்களைப் பின்பற்றித்தான் போலும், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" [illegible]

# லட்ச ரூபா பொருட்கள் ஆலயத்தில் திருட்டு

சாய்ந்தமருது, செவ். கல்முனைத் தொகுதியைச் சேர்ந்த பாண்டிருப்பு பிள்ளையார் ஆலயத்தினுள் வைக்கப்பட்டிருந்த ஒருலட்சத்துக்கு மதிகமான ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளனவாம்.

பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயத்துக்குச் சொந்தமான குத்துவிளக்கு மற்றும் பல பொருட்கள் வழமைபோல் பாண்டிருப்பு பிள்ளையார் ஆலயத்தினுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாகவும் இப்பொருட்கள் முழுவதும் திருடப்பட்டுள்ளதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

கல்முனைப் பொலிஸார் புலன்விசாரணையிலீடுபட்டுள்ளனர்.

# 'நீண்ட நாள் கோரிக்கை இன்று நிறைவேறுகிறது'

புலோலி, செவ்வாய் "இன்றைய அரசாங்கம் தொழிற் சங்கங்களுக்கு முதலிடம் அளித்துள்ள இவ்வேளையில் எல்லா ஆசிரியர்களும். ஏதாவதொரு ஆசிரிய தொழிற்சங்கத்தில் அங்கத்துவம் பெற்று எமக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகளுக்காகத் தொழிற்ப[illegible] முன்வரவேண்டும்."

வடமராட்சி தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் தலைவர் திரு. ஆ. க. மகாலிங்கம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

வடமத்திய ஆங்கிலப் பாடசாலை மண்டபத்தில் நடந்த இக்கூட்டத்தில் திரு. மகாலிங்கம் மேலும் கூறியதாவது;

"எல்லாத் தொழிலாளரும் தங்கள் தொழில் உரிமையைப் பாதுகாப்பதற்குச் சங்கங்கள் அமைத்து நடாத்திவருகிருர்கள், ஆசிரியர்களிற் பலர் இன்னும் தொழிற்சங்கத்தின் பயன் கருதாது தொழிற் சங்க அங்கத்தவராக இருப்பது மிகவும் கவலைக்குரியதாகும்.

எமது சங்கம் பாடசாலைகளெல்லாம் தேசியமயமாகிய பின் நடைபெற்ற ஆசிரியர் இடமாற்றங்கள் ஒருவகையான ஒழுங்கான இடமாற்றத் திட்டத்தை அமைக்காமல் காலத்திற்குக் காலம் வெவ்வேறு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்று வந்ததை அவ்வப்போது எதிர்த்துவந்ததோடு, ஒழுங்கான மாற்றத் திட்டத்தை அமைத்த பின்பே இடமாற்றம் நிகழவேண்டுமெனக் கேட்டுவந்தது.

அக்காலத்தில் இடமாற்றத்திற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் எமது சங்க [illegible]

இடமாற்றத் திட்டம் இப்பொழுது ஆக்கப்பட்டு இடமாற்றச்சபையில் ஆசிரியர்கள் இடம்பெறவும் வழி வகுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கஷ்டமான பிரதேசப் பாடசாலைகள் பிரிக்கப்பட்டு அப்பாடசாலைகளில் தலைமையாசிரியராகக் கடமையாற்றுபவர்களுக்கு 50ரூபாவும், உதவியாசிரியர்களுக்கு 40 ரூபாவும் விசேட சகாயம் வழங்க முன்வந்துள்ளது. இவையெல்லாம் தொழிற்சங்கத்தின் முறையீட்டாலே ஏற்பட்டதென்பதை எந்த ஆசிரியராவது மறக்கமுடியாது."

இடமாற்றத் திட்டம் ஆங்கில மொழியில் அனுப்பப்பட்டுள்ளது. அது எல்லா ஆசிரியர்களுக்கும் விளங்கக்கூடிய முறையில் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு எல்லாத் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஏகமனதாக இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

## 20ந் திகதி மகாநாடு

கிளிநொச்சி, செவ்வாய் அடுத்த ஆண்டு தை மாதத்திலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் 17 வகைப்பட்ட உப உணவுப் பொருட்களின் இறக்குமதியை ஏகபோகமாக்கவிருக்கிறது இவ்வுணவுப் பொருட்கள் கூட்டுறவுச் சமாசங்கள் மூலம் பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் விநியோகிக்கப்படும்.

இவ்விடயம் சம்பந்தமான மகாநாடு ஒன்றைப் பதில் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தக கைத்தொழில் கூட்டுத்தாபன சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வர்த்தக, கைத்தொழில் அதிபர்கள் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையைத் துரிதப்படுத்திப் பூர்த்திசெய்வதன் மூலம் வேலையில்லாப் பிரச்னை பெருமளவில் தீருமென்ற நம்பிக்கையும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆட்சிமன்றத்தில் வரவு-செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தின்போது உடுவில் பிரதிநிதி திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, காங்கேசன்துறைத் துறைமுக வேலைகள் நிறைவேற்றப்படுமென யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்த தபால் தந்தி அமைச்சரும், வீடமைப்பு அமைச்சரும் உறுதியளித்துச் சென்றிருந்த போதிலும் அதற்கான முயற்சிகள் எதுவும் வரவு-செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லையென்பதை சுட்டிக்காட்டியிருந்தார். உடுவில் பிரதிநிதி இவை பற்றி நினைவூட்டியிருப்பதும் வட இலங்கை வர்த்தக, கைத்தொழில் அதிபர்கள் இப்போது ஒரு தீர்மானத்தின் மூலம் விஞ்ஞான கைத்தொழில் அமைச்சரைக் கோரியிருப்பதும் அரசாங்கம் இது விஷயத்தில் கவனம் செலுத்துவதற்கு உதவ வேண்டும்.

ஒரு தடவை ஆட்சியிலிருந்த அரசாங்கம் அடுத்த தேர்தலில் தோல்வியடைந்து மற்றொரு கட்சியினர் ஆட்சிக்கு வந்ததும் முன்னர் ஆட்சியிலிருந்தவர்கள் மீது குறைகூறுவதும் அவர்கள் செய்த காரியங்கள் யாவும் தவறானவை என்று குற்றச்சாட்டுவதும் நமது நாட்டில் பழகிப்போன சாதாரணவிஷயமாகிவிட்டது. திரு. டட்லி சேனநாயக்காவின் தலைமையில் ஆட்சிபீடத்திலமரும் அரசாங்கத்தை அதன்பின் ஆட்சிக்கு வரும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங்கம் குறை கூறுவதும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தலைமையிலான அரசாங் குறைபாடாக இருக்கலாம்.

ஆனாலும் யார் எதைச் செய்தார்களென்பதை விட நாட்டுக்கு நன்மையானதை யார் செய்தாலும், யார் தொடங்கினாலும் அவற்றைத் துரிதமாகச் செயல்படுத்தி, நிறைவேற்றி அதன் பயனை நாட்டு மக்களும் நாடும் அனுபவிக்கவேண்டுமென்ற நல்ல மனப்பான்மை நம் நாட்டுத் தலைவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

கொழும்பு நகருக்கு அருகில் எக்கல என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில் பேட்டை, நம்நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப்பொருள்களிலிருந்து நமக்குத் தேவையான பல பொருள்களையும் உற்பத்தி செய்கிறது. இதுவரை வெளிநாடுகளை எதிர்பார்த்திருந்த பல பொருள்களும் கூட இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்நியச் செலாவணியை ஓரளவாவது மிச்சப்படுத்தியிருப்பதுடன் பல நூற்றுக்கணக்கானவர்களுக்கு வேலை வாய்ப்பும் அளித்திருக்கிறது.

இலங்கையின் வடபகுதியில் மூலப் பொருள்களுக்கும் மூளைப்பலத்துக்கும் ஆட்பலத்துக்கும் குறைவில்லை. இவற்றைப் பயன்படுத்தும் நோக்கத்துடன்தான் அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டையொன்றை அமைப்பதற்கு முன்னைய அரசாங்கம் திட்டமிட்டு பூர்வாங்க வேலைகளையும் ஆரம்பித்தது. வடக்கில் எங்கே கைத்தொழில் பேட்டையை ஆரம்பிப்பதென்பதே முதலில் பிரச்னையாகி பின்னர் அச்சுவேலி தெரிவுசெய்யப்பட்டது

முன்னைய அரசாங்கம் தொடங்கிய திட்டமென்பதால் இதை அசட்டை செய்வது இன்றைய அரசாங்கத்துக்கு நல்லதல்ல

அச்சுவேலியில் கைத்தொழில் பேட்டையை அமைப்பதன் மூலம் வட பகுதிக்கு மட்டுமல்ல நாட்டுக்கே நன்மையென்பதை உணர்ந்து அத்திட்டத்தைப் பூர்த்திசெய்ய முன்வரவேண்டியது அரசாங்கத்தின் கடமையும் பொறுப்புமாகும்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாவலர் அவர்கள் தமது "சற்குரு மணிமாலை" என்னும் நூலுக்கு எழுதிய முகவுரையில் எடுத்துக்காட்டியுள்ளார். அவற்றுள் முக்கியமான சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

நாவலர் அவர்களிடம் காணப்பட்ட முக்கியகுணம் அஞ்சாமையாகும். இக்குணம் அவர்களிடம் நிரம்பியிருந்ததனால் தான் அவர்கள் செயற்கரிய செயல்களைச் செய்ய முடிந்தது. தம் இலட்சியங்களைக் கடைப்பிடிக்கையில் உயர் அரசாங்க அதிகாரிகளையும் மடாதிபதிகளையும் கோயில் முகாமைக்காரர்களையும் எதிர்க்க வேண்டிநேர்ந்தது. இதனால் [illegible]மில்லை அஞ்சவருவதுமில்லை' யெனவாழ்ந்தார். இவ்வஞ்சாமை பற்றி நாவலர் அவர்கள் கூறியிருப்பதை எடுத்[illegible]க்காட்டுவது பொருத்தமாகும் 'கடவுளுக்கு அச்சம் பெருகப் பெருக மனிதருக்கு அஞ்சும் அச்சம்குன்றி குன்றிவிடும்"

அடுத்த அருங்குணம் நடுவுநிலைமையாகும் நடுவு நிலைமையை நாவலர் அவர்கள் பின்வருமாறு விளக்கியுள்ளார். "பகைவர் அயலோர், நாட்டினர் என்றும் இம்மூவகையோரிடத்தும், தருமத்தில் வழுவாது ஒப்ப நிற்றல் நடுவு நிலைமையாகும்' குற்றத்தைக் கண்டிக்கும் பொழுது அவர்கள் கண்ட நற்குணங்களைப் பாராட்டியுள்ளார்,

நாவலர் அவர்கள் மிகவும் மானமுடையவர் மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமா[illegible] போல மானம்போனபி[illegible] வாழவிரும்பாதவர் ஒரு வழக்கில் தீர்ப்பு தமக்கு மாறாகவரின் உயிர்நீக்கத் திட்டமிட்டிருந்தார்.

நாவலர் அவர்களிடம் சமயாபிமான தேசாபிமானம் பாஷாபிமானம் என்னும் அருங்குணங்கள் நிறைந்திருந்தன, தமது சமயத்தின் இழிநிலைகண்டு பல முறைகண்ணீர் வடித்துள்ளார். சமய வளர்ச்சிக்காகவே நைஷ்டிகப் பிரமச்சாரிய விரதம் பூண்டார்.

அவர்களின் தேசாபிமானத்தைச் சி. வை. தாமோதரம்பிள்ளையைக் கண்டித்து எழுதிய ஒரு பத்திரிகைக்கு விடையாக வெளியிட்ட நல்லறவுச்சுடர் கொளுத்துதல் என்னும் பத்திரத்தில் நிறையக்காணலாம் அதில் ஈழநாட்டில் சைவமும் தமிழும், தமிழ் நாட்டிலும் பார்க்கச் சிறந்த நிலையில் இருக்கிறதென்பதை பல "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" எனப் பாரதியார் பாடியுள்ளார்

மேற்குறிப்பிடப்பட்டது போன்ற அருங்குணங்களைப் பொருந்திய நாவலர் அவர்களை நமக்கு வழிகாட்டியாகக் கொள்வோமாக,

[சென்ற நாவலர் வாரத்தையொட்டி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசியதன் சாரம்]

......

# ரமழான் குரலொலி



"உங்களில் ஒருவர் தன்கயிற்றை எடுத்துக்கொண்டு (காட்டிற்குச் சென்று) தன்தோள் மீது விறகுக் கட்டொன்றைச் சுமந்து வந்து அதை விற்றுக்கொள்கிறார். இதனால் அல்லா அவரது கஷ்டங்களைப் போக்கிவிடுகின்றான் இப்படிச் செய் (ஜீவனோபாயத்தை போக்கிக் கொள்)வது, அவர் பிறரிடம் இரந்து நிற்கும் போது சிலர் கொடுத்தும் இன்னும் சிலர் கொடுக்காமலும் விடுகின்றனரே அதைவிடச் சிறந்தது." (நபிமொழி: கூறுபவர்: ஸுபைர் இப்னுல் அவ்வாம் (றழி) ஆதாரம்: புகாரி.)

"இறை தூதர் (ஸல்) அவர்கள் (மின்பர்) மேடையில் நின்றுகொண்டு தர்மம் கொடுத்தல் பற்றியும் பிச்சை வாங்குவதிலிருந்து பேணிக் கொள்ளுதல் பற்றியும் கூறிக்கொண்டு நின்றனர், (அது போழ்து மேலுள்ள கை கீழுள்ள கையை விட மேன்மையானது. மேல் உள்ள கை தானம் கொடுப்பது. கீழ் உள்ள கை இரப்பது என்று உரைத்தார்கள்." (நபிமொழி: கூறுபவர்: இப்னு உமர் (றழி) ஆதாரம்: புகாரி. முஸ்லிம்.)

இஸ்லாம் பிச்சையேற்றுண்ணலை மிகவும் இகழ்ந்துரைக்கின்றது. கேட்டு வருபவனை வெருட்டாதே என்று கூறும் அதே வேளையில் நீர் பிறரிடம் கையேந்தித் திரியாதே என்றும் இஸ்லாம் போதிக்கிறது. சில மனிதர்கள் வசதியான தொழிலென நினைத்து அல்லும் பகலும் அலைந்து திரிந்து எத்தனையோ வீடு, கடைகளின் படிகளில் ஏறியும் இறங்கியும் இரந்து திரிகின்றனர். இது ஒரு கேவலமான தொழில் என்பதை இவர்களின் உள்ளம் உணரட்டும்.

பிச்சையேற்றலை தொழிலெனக்கொண்டோர் திருந்தி நடப்பதற்கு மேலுள்ள இரு நபி மொழிகளும் போதாதா என்ன?

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம். ஏ. ஹஸன் [அஸூரி]

தொழுகை நேரங்கள் :-

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-41 | 6-01 | 12-20 | 3-19 | 5-51 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-11 | 4-26 |

## பரீட்சை முடிவுகள்

உடுப்பிட்டி, புன்

யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி 1970 1971ம் கழகவாண்டுக்கான கணக்குப்பதிவாளர், சுருக்கெழுத்துத் தட்டெழுத்தாளர் ஆகிய இருபயிற்சி நெறிகளுக்கும் பிரவேசப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

பொ. உருத்திராங்கதன், ஜே ஜெயக்குமார், க சின்னத்தம்பி, க சின்னத்துரை ந ஜெயரா்சா, ஏ கணேசானந்தராசா, நா பஞ்சாட்சரம் க சபாநாதன், ச இராஜினிதேவி, க மல்லிகா, க புவனேஸ்வரி, ப புஷ்பராணி ந நகுலேஸ்வரி, சி விஜயலட்சுமி, ச இராசலட்சுமி, நா அன்னபூரணம் வி வனஜாம்பாள், கமலராணி.

## 13 பேர் வெளிநடப்பு; 16 பேர் கூட்டம் நடத்தினர்

கொழும்பு, செவ்.

இஸ்லாமிய சோஷலிஸ முன்னணியின் கொழும்புக் கிளைக்கூட்டத்தில், தீர்மானமொன்று சமர்ப்பிக்கப்பட்டபொழுது, அதனை ஆட்சேபித்து 13 உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.

இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது, ஒருபகுதியினர் இதனை ஆட்சேபித்து இத்தீர்மானம் அடுத்த செயல்கமிட்டிக் கூட்டத்தில் கொண்டுவரப்படவேண்டுமெனக் கூறினர். இப்படியானதொரு தீர்மானம் கொண்டுவரப்படவிருப்பதாக முன்னறிவித்தல் கொடுக்கப்படவில்லையென்றும், இத் தீர்மானத்தை படிப்பதற்கு நேரமில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர்.

சூடான விவாதத்தைத் தொடர்ந்து இதுபற்றி வாக்களிப்பிற்கு விடுவதென முடிவுசெய்யப்பட்டது. தீர்மானம் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவேண்டுமென 16 பேரும், அதனை எதிர்த்து 13 பேரும் வாக்களித்தனர்.

எதிர்த்து வாக்களித்த 13 பேரும் வெளிநடப்பு செய்தபோது, மற்றவர்கள் தீர்மானத்தை விவாதிப்பதற்காக தொடர்ந்து கூட்டத்தை நடத்தினார்கள்.

## விளம்பரம்

பின்வரும் இடங்களிலும் ஈழநாடு கிடைக்கும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

1. எம். எம். ஆர். புத்தகசாலை
நியூஸ் ஏஜன்ட்,
198, பிரதான வீதி, கெக்கிராவை.

2. எம். எம். பாரூக்
முன்னேற்றம் புத்தகசாலை,
சாய்ந்தமருது — 3. 2558

அக்காலத்தில் இடமாற்றத்திற்குப் பொறுப்பாக இருந்தவர்கள் எமது சங்க அபிப்பிராயத்தைச் செவிமடுக்கவில்லை எமது சங்கம் தொடர்ந்து கேட்டுவந்த

## மந்திரிசபையின் தீர்மானங்கள்

கொழும்பு செவ்வாய்

தடையின்றி தொடர்ந்து நல்ல ரகமான தீப்பெட்டிகளை மக்களுக்களிப்பதற்காக அரசாங்க தீப்பெட்டி தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு மந்திரிசபை அங்கிகரித்துள்ளது

இத்தொழிற் சாலையை நிறுவக்கோரும் தீர்மானத்தை கைத்தொழில் அமைச்சர் திரு ரி. பி சுபசிங்கா மந்திரிசபையில் கொண்டு வந்தார்.

தோட்ட தொழில் அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் சிபார்சின் பேரில் தேயிலை கூட்டுத்தாபனம் ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்பநடவடிக்கையெடுப்பதற்கு மந்திரிசபை அங்கீகாரம் அளித்துள்ளது உத்தேச தேயிலை கூட்டுத்தாபனம் இலங்கையில் தேயிலை உற்பத்தியாளரின் நன்மைக்காக பாடுபடும்.

15 புதிய காரியாதிகாரி பிரிவுகளையும் 220 புதிய கிராமசேவகர்கள் பிரிவுகளையும் நிறுவவேண்டுமென பொது நிர்வாக உள்நாட்டு உள்ளூராட்சி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சிபார்சும் மந்திரிசபையின் அங்கீகாரத்தை பெற்றுள்ளது.

— —

## தமிழிலும் விண்ணப்பம் கோருக

நல்லூர், செவ்.

இலங்கைப் போக்குவரத்துச்சபை பிரத்தியேக பயிலுநர் பதவிக்கான விண்ணப்பத்தை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் கோரியிருப்பதனை கோப்பாய் எம். பி. திரு எஸ். கதிரவேலுப்பிள்ளை ஆட்சேபித்துள்ளார்.

திரு. கதிரவேலுப்பிள்ளை இ. போ ச. தற்காலிக ஆளணி முகாமையாளருக்கும், தலைவருக்கும் அனுப்பி வைத்துள்ள அவசரத்தந்தியில் இப்பதவிகளுக்கான விண்ணப்பம் தமிழிலும் கோரப்படாதமை ஏன் என்பதனைக் கேட்டிருப்பதோடு தமிழ்மொழியிலும் விண்ணப்பம் கோர நடவடிக்கையெடுக்குமாறு வேண்டியுள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமான மகாநாடு ஒன்றைப் பதில் கூட்டுறவு ஆணையாளர் திரு. ரி. டி. எல். பீரிஸ் கூட்டுகிறார். இம்மாதம் 20ந் திகதி யாழ்ப்பாண வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மகாநாட்டிற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர்கள், இணைப்பு அலுவலர்கள், சமாசப் பிரதிநிதிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மகாநாட்டில் கூட்டுறவு மொத்த விற்பனை இலாகா உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வர்.

......

## மாவட்ட...

(1- ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிடுதலில் பொது ஜன தொடர்பு கடந்தகாலங்களில் குறைவாகவிருந்த காரணத்தினாலேயே திட்டங்கள் யாவும் செயல்படாது எழுத்தளவில் தங்கிவிட்டன. மக்கள் அரசாங்கம் திட்டமிடுதலில் மக்களுக்கு கூடிய பங்கு அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்கிறது.

### இலங்கை-இந்திய ஒப்பந்தம்

அடுத்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தைமுன்னைய அரசாங்கம் சரியானமுறையில் அமுல் செய்யவில்லை. சரியான வகையில் அமுல் நடத்தியிருந்தால் இதுவரை ஒருலட்சத்துஐம்பதினாயிரம் பேர் தாயகம் திரும்பியிருப்பர்.

— —

## கி. சேவையாளர்கள் இடமாற்றம்

நல்லூர், செவ்.

யாழ். மாவட்டத்திலுள்ள பன்னிரண்டு காரியாதிகாரி பிரிவுகளில் இருந்தும் 52 கிராம சேவையாளர்கள் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யாழ் மாவட்ட அரசாங்க அதிபரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் வலிமேற்குகாரியாதிகாரி பிரிவில் பத்துபேரும், தென்மராட்சி காரியாதிகாரி பிரிவில் ஒன்பது பேரும், தீவுப் பகுதி காரியாதிகாரி பிரிவில் எட்டுப்பேரும், வலிவடகில் ஏழு பேரும், வலி கிழக்கிலும், வடமராச்சி தெற்கு, மேற்கு காரியாதிகாரி பிரிவில் தலா நாலுபேரும் நெடுந்தீவில் மூன்றுபேரும், வடமராட்சி வடக்குகிழக்கு, பச்சிலைப்பள்ளி ஆகிய இடங்களில் தலா இருவரும் கரைச்சி, பூனகரி, யாழ்ப்பாணம் பிரிவுகளில் தலா ஒருவரும் இடமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org